உ

சிவகுகமயம்.

திருச்சிற்றம்பலம்.

கீழப்பூங்குடியிற்
றிருவருட் சமாதிகொண் டெழுந்தருளியிருக்கும்

**மிளகாய்ச்சுவாமிகள்**

என வழங்கும்

ஸ்ரீ

# இராமாநுஜசுவாமிக

# சரித்திரம்.

இஃது

கீழப்பூங்குடி உயர்தனவணிக குலமுதல்வர்களாகிய

திருவாளர். கூ. கரு. நா. சித.

சிதம்பரஞ் செட்டியார் அவர்களும்

திருவாளர். கூ. அரு. க. வயி.

வயிரவன் செட்டியார் அவர்களும்

கேட்டுக்கொண்டதற்கிணங்கி

திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவானும்,
மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் சைவநூற் பரிசோதகருமாகிய
சேற்றூர் மு. ரா. சுப்பிரமணிக்கவிராயரவர்கள் மாணக்கரும்,
செந்தமிழ்ப்பானுப் பத்திராதிபரும் ஆகிய

ஆலங்காடு தமிழ்ப்பண்டிதர்

**வை. செல்லையாப் பாவலரவர்களால்**

இயற்றப்பெற்று

மதுரை, மீனலோசனி அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

1930.

காப்பி ரைட்] [விலை அணா 12.

3
4
10
12
14
16
21
24

1118

உ

# பொருளடக்கம்.


| | பக்கம். |
|---|---|
| முகவுரை. | ௫ |
| சாற்றுக்கவிகள். | ௬ |
| கடவுள் வணக்கம். | 1 |
| நாடு | 2 |
| நகரம் | 3 |
| தல விசேடம் | 4 |
| தீர்த்த விசேடம் | 10 |
| மூர்த்தி விசேடம் | 12 |
| திருவவதாரப் படலம் | 14 |
| திருமணப் படலம் | 16 |
| வெளியேறு படலம் | 21 |
| மெய்ஞ்ஞான நிலையுறுதல் | 24 |
| இல்லறம் நீத்து வெளியேறுதல் | 25 |
| திருவிளையாட்டுப் படலம் | 26 |
| சித்திபெற்ற படலம் | 40 |
| கும்பாபிஷேகப் படலம் | 44 |
| புத்தூர் சிவாநந்தசுவாமிகள் அடிகள்மேற் பாடியருளிய பதிகம் | 46 |

உ

சிவகுருமயம்.

# முகவுரை.

பரந்த கடல் புடைசூழ்ந்த இந்நிலவுலகின்கண் அநாதி மலமுத்த சித்துருவாய்த்திகழுஞ் சிவபெருமான் திருவடிக்கண் சரியையாதி நால்வகை வழிபாட்டானும் மெய்யன்பு செலுத்தி அருட்பேறெய்தி யின்புற்றோரே பெரியாரெனப் பெறுவர். இப்பெரியாரே வானும் வையமும் வந்துதாள் வணங்குதற்கேற்ற மாண்பமைந்தவரும், உலகினரால் செயற்கரும் அற்புதச் செயல்களைச் செய்யுந் தீரரும், தம்மைப் பூசிப்போர் தீவினைகளை யகற்றி யிம்மை மறுமையின்பங்களுறச் செய்பவரும் ஆவர். கல்வியானும், செல்வத்தானும், அதிகாரத்தானும், ஆடம்பரத்தானும், குலத்தானும், யாமே பெரியமெனத் தருக்குற்று இறைவன் றிருவடிக்கண் அன்பு செலுத்தாதிருப்பவர் எஞ்ஞான்றும் பெரியராகார். இவற்றை

நிலத்திமை யோரிற் றலையாய்ப் பிறந்து மறையொடங்கம்
வலத்திமைப் போதும் பிரியா ரெரிவளர்த் தாலும்வெற்பன்
குலத்துமை யோர்பங்கர் கச்சியு ளேகம்பங் கூடித்தொழு
நலத்தமை யாதவர் வேட்டுவர் தம்மி னடுப்படையே

எனவும்,

படையா லுயிர்கொன்று தின்று பசுக்களைப் போலச்செல்லு
நடையா லறிவின்றி நட்பிடைப் பொய்த்துக் குலங்களினுங்
கடையாய்ப் பிறக்கினுங் கச்சியு ளேகம்பத் தெங்களையா
ளுடையான் கழற்கன்ப ரேலவர் யாவர்க்கு முத்தமரே

எனவும்

அருளிய நமது பட்டினத்தடிகள் திருவாக்கானும்

குலமில்லார் வண்மைக் குணமில்லார் கல்வி
நலமில்லா ராவு நன்றே—வலம்வந்
தரிய திருவருணை யண்ணலுக்கா ளாவார்
பெரியவர்க்கு மேலான பேர்

என நமது குகை நமச்சிவாய மூர்த்திகள் அருளிய திருவாக்கானும்,

# முகவுரை.

சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவ ரேனும்
மங்குவா ரவர்செல்வ மதிப்போ மல்லோ
மாதேவர்க் கேகாந்த ரல்லா ராகில்
அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோ யரா
யாவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனுங்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகி
லவர்கண்டீர் யாம்வணங்குங் கடவு ளாரே

என நமது ஆளுடைய அரசர் அருளிய திருவாக்கானும் நன்கறியலாகும். இத்தகைய பெரியார்களுள் ஒருவராய் விளங்குபவர் கீழப்பூங்குடியென வழங்கும் பூமன் நகரில் பதிநூலிற் கூறியவாறு இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதமுற்று, தொண்டைமான் புதுக்கோட்டையில் சிவானுபூதிச் செல்வராய் நிலவியிருந்த உலகநாத சுவாமிகளின் றிருவருள் பெற்று, சிவஞான முதிர்ச்சியுடையராய், பாலர் பித்தர் பேயர் குணங்கள் மருவி, உலகத்தை மறந்து, மெய்ப்பொருளின்பால் நாட்டத்தைவைத்து, திருவருட்பேற்றால் செயற்கரிய சித்து விளையாடல்களைச் செய்து சீவன்முத்தராயிருந்து, இற்றைக்கு முப்பத்தைந்து ஆண்டுகட்கு முன்னர் விதேகமுத்தியெய்தி, சமாதிநிலையுற்றிருக்கின்ற மிளகாய்ச் சுவாமியென வழங்கும் இராமைய அடிகளாவர்.

இவர்கள் திருமாலை வழிபடுதற்குரிய தாசர்குலத்திற் றோன்றியவர்களாயிருந்தும் முன்னைத் தவத்தால் உண்மையறிவானந்த வுருவாய்த்திகழும் பரங்கருணைத் தடங்கடலாகிய சிவபிரானையே தலைவரென வுணர்ந்து அகத்தொழில் அறிவுத் தொழில்களான் வழிபாடாற்றி இவ்வரும்பெரும் பேறெய்தியுள்ளார்களென்பதற்கு இவர்கள் சமாதியில் இறைவன் அருட்குறியாகிய சிவலிங்கந்தாபித்திருத்தலும் உலகநாத சுவாமிகள்பால் திருவருள் பெற்றிருத்தலும் இவ்விராமைய அடிகள்பால் ஞானோபதேசம் பெற்ற புத்தூர் சிவானந்த சுவாமிகள் பாடியருளிய சிவானுபூதி நிலை ததும்புந் தீஞ்சுவைச் செய்யுட்களுமே தக்கசான்றுகளாகும்.

இத்தகைய பெரியார் சரிதத்தை, பூமன் நகரில் வசிக்கும் தனவைசிய தனவான்களாகிய கூ, சரு. நா. சித. சிதம்பரஞ் செட்டியார்

அவர்களும், கூ. அரு. க. வயி. வயிரவன் செட்டியார் அவர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்கி நன்னூலாதிய பஞ்சவிலக்கணங்கள் சிவபுராணாதியிலக்கியங்கள் சிவஞானபோதாதி சித்தாந்த சாத்திரங்களாகியவைகளை முறையாகக்கற்றுத் தேர்ந்து செய்யுளியற்றுந் திறம் பெரிதும் வாய்ந்துள்ள சைவத் திருவாளர் ஆலங்காடு தமிழ்ப் பண்டிதர் வை. செல்லையாப் பாவலர் அவர்கள் சொற்சுவை பொருட்சுவை பத்திச் சுவைகள் நிறைந்து ததும்புமாறு இனிய செந்தமிழ் உரை நடையில் எழுதி முடித்துள்ளார்கள். இச்சரிதத்தில் வரைந்துள்ள பெரியார் செயலனைத்தும் அவ்வப்போது நேரிற் கண்டுகளித்தோர் முகமாகக் கேட்டுணர்ந்தவைகளேயாகும். இச்சரிதம் கடவுள் இல்லையெனக்கூறும் நாத்திகக் குழுவினர் வாய்களை அடக்குதற்கும் ஆத்திகராவார் இறைவனிடத்தும் அடியாரிடத்தும் மெய்யன்பு செலுத்தி அவரருள் பெற்றுய்தற்கும் மிகப் பயனுடையதாகும். பெரியார் சரிதங்களைப் பொய்யெனக்கூறும் நாத்திகக்குழுவினர் சில்லாண்டுகட்கு முன் இப்பொழுதுள்ளார் பலருங் கண்டின்புறுமாறு நிகழ்ந்த பெரியார் சரிதத்தைக்கொண்டே பல்லாண்டுகட்கு முன்னிகழ்ந்த சைவ சமைய பரமாசாரியார் சரிதங்களையும் மற்றுமுள்ள பெரியார் சரிதங்களையும் மெய்யெனக்கொண்டு உய்யுநெறிபேணுவாராக.

நாதன் றன்னையு நாதன தம்புயப்
பாதஞ் சேர்ந்து பரவினர் தம்மையும்
பேதஞ் செய்வது பேதமை நீரென
வேதங் கூறும் விழுப்பொருள் பொய்க்குமோ

என்ற பெரியார் திருவாக்கின்வண்ணம் இறைவன் புகழையும் இறைவனடியார் புகழையும் எழுதுவதால் வருஞ் சிவபுண்ணியம் ஒன்றேயாகலான் இச்சரிதத்தை மெய்யன்புடன் எழுதி முடித்த பண்டிதரவர்கட்கும் எழுதுமாறு தூண்டிய கனவான்கட்கும் பல வகை நலன்களும் மல்குமாறு சிற்சபை பொலியத் திருநடமியற்றும் அற்புதக் கூத்தர் அருள்பாலிப்பாராக. சுபம்.

சுக்கில௵
தைமீ ௨௰௭

இங்ஙனம்,
இலக்குமண சுவாமி,
சித்தாந்த சைவநிலையம், உலகன்பட்டி.

உ

சிவமயம்.

# சாற்றுக்கவிகள்.

---

மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான் மகா-ள-ள-ஸ்ரீ

## மு. ரா. அருணாசலக் கவிராயரவர்கள் பாடியவை.

தாராமைய லகலுதற்குச் சன்மார்க்கந் தனையடைந்து
தனக்குத் தானி
காராமையன் றிருவருளாற் பற்பலவற் புதக்காட்சி
காட்டிக் காட்டில்
மாராமைய வொருகணைவிட் டோண்பெயரே தன்பெயரா
வாய்க்கப் பெற்ற
இராமைய னெனும்பெரியோன் சரிதத்தை யுலகிலுள்ளோ
ரெவருங் காண. (1)

எழுதியுயர் புத்தகமாச் செய்வித்துத் தமிழ்வழக்க
மியலி டங்கள்
முழுதும்விடுப் போமென்று வணிகர்குல திலகரென
முந்தி நின்ற
தொழுதகுசீர்ச் சிதம்பரமால் வைரவவே ளிருவருமே
சொல்லக் கேட்டுப்
பழுதறுசெந் தமிழின்பந் தருமொழியா லெழுதியச்சிற்
பதிப்பித் தானால். (2)

அன்னவன்யா ரெனிற்கீழைப் பூங்குடியிற் றற்காலத்
தமர்ந்தெல் லார்க்கு
நன்னயமாந் தமிழருமை யெடுத்தெடுத்துப் போதிக்கு
நலம்பெற் றோனென்
பின்னவன்சுப் பிரமணிய நாவலன்பாற் பலகலையும்
பெரிது கற்றோன்
பன்னலஞ்சார் கவிபாடுந் திறமையுற்ற செல்லையாட்
பாவ லோனே. (3)

மகிபாலன்பட்டி. உயர்திருவாளர் பண்டிதமணி

## மு. கதிரேசச்செட்டியாரவர்க ளியற்றியவை.

நேரிசை வெண்பா.

பூம னகரிற் பொருந்துபல சித்தியெலாம்
ஏம முறச்செய் யிராமைய—நாமப்
பெரியார் சரிதவியல் பீடுபெறத் தந்தான்
திருவா ரொருபுலவன் தேர்ந்து.

அன்னவன்றான் யாரென்னி னிலங்கா டென்னுமுயர்
நன்னகரிற் றோன்றினோ னற்றமிழும்—பன்னரிய
தெய்வத் திருமுறையுந் தேர்ந்துணர்ந்தோன் செல்லையப்பேர்ச்
சைவ னுவகை தழைத்து.

---

மதுரை மீனலோசனி அச்சியந்திரசாலை மானேஜிங் புரப்பிரைட்டர்

மகா-ா-ா-ஸ்ரீ

## அ. முத்துச்சாமிப்பிள்ளையவர்கள் இயற்றியது.

நற்குணமே யுருவென்னும் செல்லையாப் பாவலவன்
ஞாலந் தன்னில்
அற்புதங்கள் பலபுரியு மிராமைய வடிகள்க்கைத்
யன்பர் வேண்டச்
சொற்சுவையும் பொருட்சுவையுந் தேனென்னவே யறிஞர்சொல்லத்
தொன்னூ லாற்றால்
நற்றமிழி லெழுதியிந் தெந்நாளும் புகழோங்க
நலம்பெற் றானே.

உ

சிவகுருமயம்.

திருச்சிற்றம்பலம்.

கீழப்பூங்குடியெனும் பூமனகரத்தில்
திருவருட் சமாதிகொண் டெழுந்தருளியிருக்கும்
ஸ்ரீ மிளகாய்ச்சுவாமிகள் என வழங்கும்

# இராமாநுஜ சுவாமிகள்

## சரித்திரம்.

### சசிவர்ன விநாயகர் வணக்கம்.

திருமருவும் அகரமென வுயிர்க்குயிராய் உலகமெலாஞ்
செறிந்தெஞ் ஞான்றும்
பெருமருவும் பிரணவத்திற் பேசுமரும் பொருளாயெப்
பேறும் நல்கி
அருமருவு மருளொளியாய்ப் பூமனக ரெனும்பதியி
னமர்ந்து நாளுங்
கருமருவா தடியவருக் கருள்சசிவர் ணக்களிற்றைக்
கருத்துள் வைப்பாம்.

### குமரவேள் வணக்கம்.

தாரகத்தி னுட்பொருளைத் தணிபடைந்தோர்க் கருந்துணையைத்
தருமவேறார்
ஆரகத்தஞ் சடைப்பெருமா னங்கிவிழி தனிற்றோன்றி
யாரன் மாதர்
சீரகத்தின் றிருமுலைப்பா லருந்திஙறுஞ் சரவணத்திற்
றிகழ்ந்தெஞ் ஞான்று
மோரகத்தார் பூமனகர் மேவுமறு முகப்பெருமா
னிணைத்தாள் போற்றி.

## இராமாநுஜ சுவாமிகள் வணக்கம்.

அருவமு முருவு மருவுரு வமுமா
யனாதியா யகண்டிதப் பொருளாய்ப்
பரவுறு மொன்றாய்ப் பலவுமாய்ப் பரந்த
பரத்துட னிரண்டறக் கலந்தே
தாமுறுஞ் சச்சி தானந்த மயமாய்த்
தனிப்பெரும் பூமனன் னகர்வாழ்
குருபர னும்ரா மானுச வடிகள்
குரைகழல் களைமுடிக் கணிவாம்.

## நாடு.

உலகெலாமதிக்கும் அலகிலாப் புகழ்மிகு மூவேந்த ராண்டதும்
பாவேந்த ரீண்டியதும் ஆகிய நந் தமிழ்நாட்டில் ஏனைய நாடுகளினுஞ்
சிறந்த தலைமைப்பாடுடையது காண்டகுவளஞ்சேர் பாண்டியநாடே
யாகும். எற்றாலோவெனின், நிலையியற் பொருள் இயங்கியற் பொருள்
களாகிய சராசரங்கள்யாவையும் கருவுறீஇ வருந்தாதீன்ற மணிவயிற்
றன்னையாம் அறப்பெருஞ் செல்வியும் அறவிடைப் பாகனும் குன்ற
மெறிந்த குமரவேளும் முறையே செங்கோலோச்சிய திறத்தானும்,
சந்தனப் பொதியச் செந்தமிழ் முனிவனும் சவுந்தரபாண்டிய
னெனுந் தமிழ் நாடனும் சங்கப்புலவருந் தழைத்தினிதிருந்த
மங்கலத்தானும், சிரபுரச் செல்வராகிய திருஞானசம்பந்தப் பெரு
மான் திருவாலவாய்க்கெழுந்தருளி அமணிருளகற்றித் திருநீற்றொளி
பரப்பிச் 'சைவசமயமே சமயம், சமயாதீதப் பழம்பொருள் சிவபெரு
மானே'யென மனிதரேயன்றி நீரும் நெருப்பும் அறிய நிறுத்திய
அற்புதத்தானும், தன்னேரில்லாத் தனிப்பேரின்பம் ஓவாது சுரக்கும்
ஒண்டமிழ்ப் பெருநூல்களாகிய கற்றறிந்தோ ரேத்துங் கலித்தொகை
திருத்தக்கதேவர் சிந்தாமணி திருக்குறள் முதலிய நன்னூல்க
ளனந்தந் தோன்றுதற்கிடனாய்த் துலங்கி முதலிடை கடையெனு
மூச் சங்கங்களும் முறையேவிளங்கிய முதன்மையானும், இறைவ
னுக்குப் பாண்டியநாடே பழம்பதியென ஆளுடைய அடிகள் அருளி
யமையானும், வையை தாமிரவர்ணி முதலிய புண்ணிய நதிகளை

புடைமையானும், திருவாதவூரர் பெரியாழ்வார் ஆண்டாள் முதலிய பெரியார்கள் திருவவதாரஞ் செய்யப்பெற்றமையானும், இன்னோ ரன்ன பன்னரும் பெருமைகள் பலவுடைமையானும் பாண்டிய நாடே தலைசிறந்த நாடாம்.

## நகரம்.

இப்பெருஞ் சிறப்பினதாம் பாண்டியநாட்டின் திருமுகமண்டல மனையது திருவாலவாய். அத் திருமுக மண்டலத்தின்கண்ணவாம் நுதலிற்றீட்டிய திலகமனையது, சிறப்பெலா மொருங்கே செறிந் தணியுற்றுத் திகழும் பூமனகரம் எனும் புண்ணிய நகரமேயாம். இந் நகரம் கீழப்பூங்குடி, பூமனகரம், கடம்பாரண்ய க்ஷேத்திரம் என்பனவாதிய பல திருநாமங்களைக்கொண்டு திகழ்வதாகும். நிகமாகம சுத்தாத்துவித சித்தாந்த சைவர், அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் முதலியோர்களின்வீதிகளும், வானுலாம் பல வண்ண மாளிகைகளும், மாண்புறும் பலவாவண வீதிகளும் மலிந்து அறச் சாலை, அன்ன சத்திரம், அடியர் மடாலயம், ஆண்டவன் கோவில், வைத்தியசாலை, கல்விக்கழகம், கற்போர்க்குறையுள், பொதுநிலை மன்றம், ஆடரங்கு முதலிய அணிமணி மாளிகைப் பந்திகளால் நிறையப்பெற்று செந்தாமரை, வெண்டாமரை, சேதாம்பல், செங் கழுநீர், நீலோற்பலம் முதலிய நறுமலர்கள் நிறைந்த வாவிகளும், ஓடைகளும், ஏரிகளும், தடாகங்களும், பன்மலர் நந்தன வனங்களும், பூஞ்சோலைகளும், உய்யானவனங்களும், சிங்கார வனங்களும், மகளி ராடும் மரகதச் செய்குன்றுகளும் யாங்கணும் பரவி நெற்பயிர் கரும் பென நீண்டு வளர்ந்த வயல்களாற் சூழப்பெற்றதாய் அரசியல், விளை பொருள், கைத்தொழில், உள்நாட்டு வாணிபம், வெளிநாட்டு வாணி பம், மரக்கலப் போக்குவரத்து, சேனை, வீரம், வென்றி ஆகிய இவைகளால் யாதொருகுறைபாடுமின்றி மேலோங்கித் தனவணிகர்க் கிருப்பிடமாய்த் தழைத்து, வளமுறு நிதிக்கோன் அளகையேயெனப் புகழுமாறு அணிகொண்டு இணையின்றி விளங்குவது கீழப்பூங்குடி யெனும் பூமனகரம்.

# தலவிசேடம்.

திருச்சிற்றம்பலம்.

ஒரு காலத்தில் பிரமதேவன் வேதவிழுப்பொருளாம் பரசிவனை பரம்பொருளென வுள்ளவா றுணர்ந்தவனாகியும் ஆணவமல மறைப்பானுந் தீவினை வசத்தானும் தேவர்கள் முன் அவ்விறைவனை யிகழ்ந்தனன். அவ்வாறிகழ்ந்த குற்றத்திற்காக உடனே உருத்திராம்சமாகிய வயிரவ மூர்த்தியால் ஒருசிரங் கிள்ளுண்டு தண்டிக்கப் பெற்றான். தண்டிக்கப்பெற்ற பிரமன் வருந்தி 'நமக்கு உண்மை ஞானங் கைகூடப் பெறாமையாலன்றோ அகந்தைகொண்டு எம் பரம் பொருளாகிய சிவபெருமானை யிகழ்ந்துகூறி ஐந்து சிரங்களில் ஒரு சிரத்தையு மிழந்து இவ்வாறு தண்டிக்கப்பெற்றேன். இனி அவ் விறைவனை யிகழ்ந்த மாபாதகத்தில் நின்றும் நீங்கி அவனை யுள்ளவா றுணரும் பதிஞானமாகிய சிவஞானத்தைப் பெற்றுய்தற்குத் தவ மியற்றுவேன்' என்றெழுந்து தனது சத்தியலோகத்தை விட்டுத் தணந்து பூவுலகிற் போந்து,

செப்பருந்திறத்துச் சித்தர்களும் முத்தர்களும் நீக்கமின்றி யமர்ந்து நிட்டைபுரியு மிடமாகிய வெள்ளிமலைக்கு நேர் கீழ்த்திசையில் இரண்டு கடிகை தூரத்தேயுள்ளதும், சிவபெருமான் செந்தமிழ்க் குறுமுனிக்குத் திருமணக்கோலங் காட்டியருளிய சிறப்புறுந் தலமாகிய திருமலைக்கு நேர் அக்கினி மூலையில் இரண்டு கடிகை தூரத்தேயுள்ளதும், எந்தையெம்பெருமா னிதயங்களிப்பச் சந்தமார் குழலியாந் தையலாளுட னமர்ந்தருளிய தன்னேரில்லாத் தலமாகிய வடகமாநகருக்கும், அன்பர்கட் கருமருந்தென வகமலர்ந்தினிக்கும் மருந்தீசுரர் சுயம்புமூர்த்தமாகத் தனது சுந்தரகுமாரனும் ஞானபண்டிதனுடன் எழுந்தருளியிருக்கும் ஏரியூரெனும் எல்லை காண்பருந் தலத்திற்கும் நேர் தென்றிசையில் ஐந்துகடிகை தூரத்தேயுள்ளதும், மாதவனாகிய மகாவிஷ்ணுமூர்த்தி இரணியனைச் சம்மாரம் செய்ய வேண்டித் தேவர்களுடன் கலந்து ஆலோசனை செய்தற்குக் கோஷ்டி கூடிய திருப்பதியாகிய திருக்கோட்டியூரெனுந் தலத்திற்கு நேர் நிருதி திசையில் ஆறுகடிகை தூரத்தேயுள்ளதும், பாண்டியநாட்டின்

பதினுன்கு சிவக்ஷேத்திரங்களுள் ஒன்ருகியதும், திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகளாற் பாடப்பெற்றதும், தலபுராணத்தை யுடையதும், உம்பர்கள் பூசித்த வுயர்வைக்கொண்டதும், மருது பாண்டியனுல் இராசகோபுர முதலிய திருப்பணிக ளனந்தஞ் செய்யப்பெற்றதும் ஆகிய திருக்கானப்பேர் என்னுங் காளேயார் கோவிலுக்கு நேர் மேற்கில் பத்துக்கடிகை தூரத்தேயுள்ளதும், மூர்த்தி தலம் தீர்த்தம் மூன்றுனும் முதன்மை பெற்றதும், சோழவரசனுற் பூசித்துத் திருப்பணி யியற்றப்பெற்ற காரணத்தால் சோழபுரம் எனுங் காரணப் பெயருடன் துலங்குவதும் ஆகிய சிவக்ஷேத்திரத்திற்கு நேர் வடக்கில் நான்கு கடிகை தூரத்தேயுள்ளதும் ஆகிய,

இக் கடம்பாரண்யத்துக்கு வந்து 'புனிதமாய் விளங்கும் இந்த இடமே நாம் தவமியற்றுதற்குரிய இடமாம்' எனத்துணிந்து அவ் விடத்தில் மிகப்பெரிய ஓடைபோலும் ஏரியொன்றுண்டாக்கி அதில் செந்தாமரை வெண்டாமரை சேதாம்பல் செங்கழுநீர் முதலிய நறுமலர்களே நிறையப் பயிராக்கி அவ்வேரியின் கரையில் வானுறநீண்டு வளர்ந்த கடம்பமரத்தடியில் சிவலிங்கப் பிரதிட்டைசெய்து அப் பெருமானுக் கபிஷேகிக்கச் சந்நிதானத்தில் ஒரு தீர்த்தம் உண்டாக்கி அத் தீர்த்தத்தால் சிவாகம முறைப்படி அபிஷேகாதிகளியற்றி தன்னுல் பயிர்செய்தமைத்த நறுமலர்களாற் பூசித்து அநேக வருடந் தவமியற்றினுன். பிரமதேவ னிவ்வாறியற்றுந் தவத்திற் கிரங்கிக் கருணைவள்ளலாகிய சிவபெருமான் இடபாரூடராய் உமையம்மை சமேதராய் அவ்விலிங்கத்தினிடமாய்த் தோன்றிப் பிரமதேவனுக்குக் காட்சி கொடுத்தருளினுர். உடனே பிரமதேவன் தவத்தில் நின்றும் நீங்கிப் பன்முறை நிலமுறப் பணிந்தெழுந்து நின்று கரங்களேச் சிரங்களிற் கூப்பியவனுய்க் கண்களினின்றும் ஆனந்த அருவி பாய நாத் தழுதழுப்பத் துதித்து, 'எம்பெருமானே! நினது பெருமை அறியாச் சிறுமையேன், தலைவனும் உனே யிகழ்ந்துரைத்த கடையேன் ஆகிய இக் கொடியேனுக்கும் எளிதாயிற்ருே நின்றிருவருள்' என்று வாய்விட்டிரங்கி வசமிழந்துநின்ருன். இவ்வாறுநிற்கின்ற பிரமனேப் பெருமான் புன்னகையுடன் திருவருட் பார்வை சாத்தி, அனுக்கிரகித்து, 'பிரமனே அஞ்சேல், நினதுகுற்றத்தைப் பொறுத்தருளினும்'

எனத் திருவாய்மலர்ந்து பிரமன் வேண்டுகோட்கிரங்கி உண்மை ஞான மருளி ஸ்ரீ பஞ்சாக்ஷர மகாமந்திரோபதேசமுஞ்செய்து திரு வாய்மலர்ந்தருளுகின்றார். 'ஏ பிரமனே! இது முதல் இத்தலம் பூமனகரம் என உன்பெயரால் விளங்குவதாக, நீ நமக்கு மலர் பயிர் செய்ய வுண்டாக்கிய இவ்வேரி செங்கழுநீர் ஓடையெனவும், நமக்கு அன்புடன் ஆட்ட நமது சந்நிதானத்திலுண்டாக்கிய இத் தீர்த்தம் பிரமதீர்த்தம் எனவும் சிறப்புறுவனவாக. இச் செங்கழுநீ ரோடை யாகிய ஏரியில் நீர்ப்பூநிறைந்து குடிகொண் டமையுமாறு பயிர் செய் தமையால் பூங்குடியெனவும் கடம்பமரங்கள் அடர்ந்த இவ்வனத்தில் கடம்ப மரத்தடியில் நம்மைப் பிரதிட்டைசெய்து பூசித்தமையால் கடம்பாரண்ய க்ஷேத்திரம் எனவும் இத்தலத்திற்கு மற்று மிருநாமங் கள் வழங்குவனவாம். நீ பூசித்த இவ் வருட்குறியும் பிரமபுரீசுரர் என உன் பெயராற் றுலங்கும்.

நாம் இச் சிவலிங்கத்தினிடமாய்த் தோன்றி உன் தீவினையை நீக்கி ஞானமருளி யுபதேசித்தமையால் எம்மையுணர்ந்த சீவன் முத்தர்களும், சித்தர்களும் இனி என்ஞான்றும் இக் கடம்பாரண்ய க்ஷேத்திரத்தில் நீக்கமின்றி யுறைவார்கள். யாவரே யாயினும் நமது சந்நிதானத்திலுள்ள இப் பிரமதீர்த்தத்தில் மூழ்கி நமது அருட்குறி யாகிய உன்பெயர்கொண்ட இப் பிரமபுரீசுரரைப் பூசித்து இக் கடம் பை வலம் வந்து அன்புடன் பணிவோர்க்கு இம்மையில் வேண்டிய இட்ட காமியங்களையுதவி மறுமையில் நமது சிவலோகத்தையுங் கொடுத்தருளுவாம்' என அனுக்கிரகித்து மறைந்தருளினார். பிரம தேவன் மீண்டும் அநேகநாள் இத்தலத்திலமர்ந்து இறைவனைப் பூசித்துத் தனதுலகையடைந்து வாழ்ந்திருந்தான்.

அதன் பின்னர் சப்தமாதர்கள் இக் கடம்பாரண்ய க்ஷேத்திரத் துக்கு வந்து பிரமதீர்த்தத்தில் மூழ்கிப் பிரமபுரீசுரரைப் பூசித்துத் தவமியற்றி வேண்டிய சித்திகளைப்பெற்றனர்.

வாதவூரடிகள் அரிமர்த்தன பாண்டியனுக்குக் குதிரைகள் வாங்கவேண்டி நிதிக்குவியல்களுடன் நால்வகைப் படைகளும் புடை சூழ்தர ஆலவாயில் நின்றும் புறப்பட்டுத் திருப்பெருந்துறைக்குப் போந்தருளுங்கால் ஓரிரவு இத்தலத்தில் தங்கியிருந்து பிரம புரீசுர

கரையும் பிரம வித்தியா நாயகியையும் பூசித்துப் பணிந்து திருவருட் குரவனைச் சேர்ப்பிக்கும்படி பிரார்த்தித்துச் சென்றனர்.

பிற்காலத்தில் சைவவேளாளர் குலதிலகராகிய காராளர் என்னும் பெயர்கொண்ட சிவயோகியொருவர் இத்தலத்தில் பிரம தீர்த்தத்திற் படிந்து பிரமபுரீசுரரைப் பூசித்துத் தவஞ்செய்ய, சிவபெருமான் அவ்விலிங்கத்தினிடமாய்த் தோன்றி 'மெய்யன்புடையாய்: யாது வேண்டினை' யெனத் திருவாய்மலர்ந்தருள, யோகியும் மனம் நெக்குவிட்டுருகப் பரவசராய்ப் பணிந்து துதித்து 'எம்பெருமானே! அடியேனுக்குச் சிவஞானத்தை யுபதேசித்தருளவேண்டு'மெனப் பிரார்த்தித்தனர். பெருமான் காராளர் என்னுஞ் சிவயோகியின் பேரன்பிற்கிரங்கி வேண்டுகோட் கிணங்கிக் கடம்பாரண்யத்தின் நேர் அக்கினி மூலையில் இரண்டு குரோச வெல்லையில் உள்ள வடவால விருக்ஷங்கள் நிறைந்த பரிசுத்தமான இடத்திற்கு யோகியை அழைத்துச்சென்று, அவ்வாலவனத்தில் ஓர் ஆலமரத்தடியில் ஞானாசாரிய மூர்த்தமாக எழுந்தருளியிருந்து, சிவயோகிக்குச் சிவாகமங்களின் முடிவாகிய சிவஞானத்தை உபதேசித்தருளினர். இவ்வாறு உபதேசித்து அவ்விடத்தில் தனது திருவருட் பார்வையால் ஒரு தீர்த்தம் உண்டாக்கி அதில் தான் முதலிற் படிந்து காராளர் என்னுஞ் சிவயோகியையும் மூழ்குவித்து அத்தீர்த்தத்திற்கு ஞான தீர்த்தம் என நாமஞ்சூட்டி யோகியைப்பார்த்துக் கூறுகின்றார்:

'அன்புடையாய்! இந்த ஞானதீர்த்தத்திற் படிந்து இத் தீர்த்தக் கரையி னமர்ந்து எம்மைத் தியானிப்பவர்களுக்கு எம்முட னிரண்டறக் கலத்தலாகிய சுத்தாத்துவித முத்தியை யருளுவாம். உனக்கும் அவ்வாறே யருளுதும். உன்னாலாகவேண்டுவனவாகிய சில காரியங்கள் உலகோபகாரமாகவுள்ளன. அவைகளையியற்றுதி'யெனக் கட்டளையிட்டு மறைந்தருளினர். சிவபிரான் யோகிக்குபதேசித்த அவ்விடம் இற்றைஞான்றும் ஆலவிருக்ஷங்கள் நிறையப்பெற்றும் ஞான தீர்த்தத்தையுடையதாயும் மனஞ் சாந்தியுறுதற்குரிய தானமாயும் விளங்குகின்றது. ஞான தீர்த்தம் நாளடைவில் அகலங்குறைந்து சிறு குண்டாகிப் பெருமான் ஆசாரிய மூர்த்தமா யமர்ந்துபதேசித்த சந்நிதானத்தில் இருக்கின்றது.

காராளர் என்னுஞ் சிவயோகி தான் பூசித்துத் தவமியற்றிய கடம்பாரண்யத்தி லெழுந்தருளிய பிரமபுரீசுரருக்கும் பிரம வித்தியா நாயகிக்கும் சிவாகம முறைப்படி ஆலயத்திருப்பணி செய்துமுடித்து கும்பாபிஷேகமியற்றி நித்திய நைமித்திக முதலாகிய பூசைகளும் உத்ஸவாதிகளுஞ் சிறப்புறச்செய்து வாழ்ந்திருந்தனர். முடிவில் சிவபிரான் றிருவருளால் சுத்தாத்துவித முத்தியைப் பெற்றனர். அதுமுதல் உலகினர் அவ்வாலயத்தைக் காராளன் கோவில் என வழங்கிவருவாராயினர். காலாந்தரங்களில் ஆலயஞ் சிதைந்தும் வெண் கலத்தோர் உத்ஸவங் கொண்டருளுமூர்த்திகள், பரிவார தேவதைகள் யாவும் செங்கழுநீ ரோடையாகிய ஏரியினுள்ளும் பிரமதீர்த்தத்திலும் மூழ்கியும் பூமியுளாழ்ந்தும் இவ்வாறு கழிந்தொழிய முடிவில் கடம்ப மரத்தடியில் பிரமபுரீசுரர் சப்த கன்னியர்களுடனும் நந்தியுடனும் எழுந்தருளியிருந்தனர். சுமார் (எ0) எழுபது வருடங்கட்கு முன்னர் இப் பூமனகரமாகிய கடம்பாரண்ய க்ஷேத்திரத்தில் சிவபுண்ணிய சீலர்களாகிய தனவணிகர்களால் புதிதாயமைத்த மீனாக்ஷி சுந்தரே சுரர் ஆலயத்தின் மேற்குப் பிரகாரத்தில் பிரமபுரீசுரரைக் கொண்டு வந்து தாபித்துப் புஷ்பவனேசுரர் என நாமஞ்சூட்டிப் பூசித்து வருகின்றனர். காராளர் என்னுஞ் சிவயோகியா லியற்றிய பிரம புரீசுரர் ஆலயமிருந்த இடத்தை இற்றைஞான்றும் காராளன்கோவில் எனவும் ஈசுரன்பதி ஈசுரன்திடல் எனவுங் கூறுகின்றனர். அவ் விடத்தில் கடம்பமரமும் அம்மரத்தினடியில் சப்த கன்னியர் நந்தி இவை முதலிய விக்கிரகங்களும் செங்கழுநீ ரோடையும் ஈசுரன் பதிக்கு முன்னர் சந்நிதானத்தில் பிரம தீர்த்தமும் விளங்கிக்கொண் டிருக்கின்றன.

காராளர் என்னுஞ் சிவயோகியர் தனக்குச் சிவபெருமான் கட்டளையிட்டபடியே உலகோபகாரமாக இக் கடம்பாரண்ய க்ஷேத்தி ரத்தி லெழுந்தருளிய பிரமபுரீசுரருக்கும் பிரம வித்தியா நாயகிக்கும் ஆலயத்திருப்பணி யியற்றி, மீண்டும் பிரமபுரீசுரர் ஆலயத்தின் நேர் மேற்றிசையில் இரண்டு குரோச வெல்லையினுள்ள வீரமாநகர் என்னும் வீரன்பட்டியில் சிவாலயம் அமைத்துச் சிவலிங்கப் பிரதிட் டைசெய்து பூசித்தும், மற்றும் பல நூற்றுக்கணக்கான நகரங்களிற்

சிவாலயத் திருப்பணி செய்தும், அவ்வாலயங்கட்கு நித்திய நைமித் திகங்கட்கு வேண்டிய மானியங்களை யுதவியும், அநேக நகரங்களில் வாவிகள் தடாகங்கள் மடாலயங்கள் சத்திரங்கள் நந்தனவனங்கள் அறச்சாலைகள் இவைகளை யளவின்றியமைத்தும், இவ்வாறு அறம் பல ஆற்றி அளகை மன்னனையனைய அரசராய் விளங்கி வாழ்ந்தவ ரென்பர். அரசராகியும் ஞானசனகரையனைய சீவன் முத்தராய்த் தாமரையிலை நீர்போற் பற்றின்றி வாழ்ந்தனர். முகமதியவரசனாகிய நவாப்பு இந்தியநாட்டிற் படையெடுத்து வந்தஞான்று யோகியார் மறைந்தருளினர் என்ப. இக்கடம்பாரண்ய க்ஷேத்திரத்தினும் இதை யடுத்த பல நகரங்களிலும் யோகியின் குலத்தவர்களாகிய காராளர் என்னுஞ் சைவ வேளாளர்கள் நிறைந்து வாழ்ந்துள்ளார்கள் என்பதற்குப் பல காரணங்கள் ஆராய்ச்சிவகையான் அறியப்படு கின்றன.

உலகெலாமதிக்கும் உயர்ந்த மெஞ்ஞானியாய்த்தோன்றி விளங்கி இற்றைக்கு (சுயடு) அறுபத்தைந்து வருடங்கட்கு முன்னர் புதுக் கோட்டையிற் றிருவருட் சமாதிகூடியருளிய உலகநாத சுவாமிகளும் சமாதியாதற்கு முன்னர் இக்கடம்பாரண்ய க்ஷேத்திரத்திற்கு வந்து சிலநாள் அமர்ந்து அற்புத ஆடல்கள் அனந்தமியற்றிச் சென் றருளினர்.

இக் கதாநாயகராகிய ஸ்ரீ இராமைய அடிகளும் இத்தலத்தின் பெருமையை யுள்ளவாறுணர்ந்தே அநேக ஆண்டுகளீண்டு வதிந்து அற்புத ஆடல்கள் அனந்தமியற்றிக் காராளர் என்னுஞ் சிவயோ கிக்குச் சிவபெருமான் ஞானாசாரிய மூர்த்தியாயெழுந்தருளிச் சிவ ஞானோபதேசஞ் செய்ததும் ஞானதீர்த்தத்தையுடையதும் ஆகிய ஆலவனத்தின் நேர் மேற்றிசையில் ஒரு குரோசவெல்லையில் திரு வருட் சமாதியாயினர். இராமைய அடிகள் சமாதியாலயத்தின் சந்நி தானத்தில் நேர் கீழ்த்திசையில் ஒரு கூப்பிடு தூரத்தில் ஞானோப தேசபீடமும் ஞானதீர்த்தமும் விளங்குகின்றன. அடிகளின் சமா திக்கு நேர் வடதிசையில் இரண்டு கூப்பிடுதூரத்தில் கடம்பாரண்ய மும், பிரமபுரீசுரர் ஆலயமிருந்த இடமாகிய ஈசுரன்பதியும், பிரம தீர்த்தமும், செங்கழுநீரோடையாகிய ஏரியும் இலங்குகின்றன.

இதுகாறுங் கூறிப்போந்த தலவிசேடத்தை மெய்யன்புடன் படிப்பவர்களுங் கேட்பவர்களும் நவக்கிரகங்களின் வக்ரோதயத்தால் உண்டாகும் தீமையில் நின்றும் நீங்கி இட்டகாமியங்களையடைந் தின்புற்று வாழ்வார்கள். மறுமையில் வீட்டின்பமும் எய்துவர்.

திருச்சிற்றம்பலம்.

---

## தீர்த்த விசேடம்.

புனிதமங்களமயமாய்த் தன்னிடத்தேவந்து விதிப்படி மூழ்கு வார்க்குச் சகல பாவங்களையும் நீக்கிச் சகல சித்திகளையு மருளவல்ல தாகிய தீர்த்தவிசேடத்தை யினிச்கூறுவாம்.

இக்கடம்பாரண்ய க்ஷேத்திரத்தில் உத்தமோத்தமமான நான்கு தீர்த்தங்கள் உள்ளன. அவையாவன: பிரமதீர்த்தம் ஞானதீர்த்தம் இராமதீர்த்தம் செங்கழுநீரோடை என்பனவாம். பிரமதீர்த்தம் ஞானதீர்த்தம் செங்கழுநீரோடை ஆகிய இம்மூன்று தீர்த்தங்களின் தோற்றத்தை முன் தலவிசேடத்திற் கூறினும். இனி இராமதீர்த்தத் தின் வரலாற்றையுஞ் சிறிது ஈண்டுக்கூறுவாம்.

திருவருட் சித்தராய் விளங்கிய இராமைய அடிகள் தாம் சமாதி கொண்டெழுந்தருளுதற்கு முன் இத்தீர்த்தத் தென்கரையில் வீற்றிருந்தருளிப் பல ஆடல்களையியற்றியும், தன்னைக் குளத்தங் கரையிராமன் குளத்தங்கரையிராமன் பச்சரிசியிராமன் இலுப்பைப் பூ இராமன் என, தமக்கெதிர்காலத்தில் நிகழப்போகும் நிகழ்ச்சி களைத் தம தன்பர்கட்கருளியும் அருளியவாறே தீர்த்தத்தென் கரையிலேயே சச்சிதானந்தமயமாய்த் தனிப்பெருஞ் சமாதியுங் கொண்டெழுந்தருளினர். அதுமுதல் இத்தீர்த்தம் இராமதீர்த்தம் என அடிகளின் பெயரால் விளங்குவதாயிற்று.

இராமைய அடிகள் சமாதியாதற்கு முன்னர் ஒருதினம் இந் நகரின் மேலைமடாலயத் தெழுந்தருளியிருந்தனர். அஞ்ஞான்று இத்தலத்தில் வசிக்கும் அந்தணர் குலத்திற் றோன்றிய பாபவிநாசய்ய ரென்பார் என்னும்போல் இவ்விராமதீர்த்தத்தில் நியமத்துடன்

மூழ்கி மேலெழ உடனே தீர்த்தத் தென்கரையில் விண்ணுலாவிய விமானமும் பல்வகை வாத்தியமுழக்கங்களும் இரதோத்ஸவ நிகழ்வும் பெருங்கூட்டமுமாகப் பிரகாசிக்குந் தோற்றத்தைக்கண்டு தம்மை மறந்து ஆரவாரித்தனர். அதையறியாத அயலார் யாதெனவினவ உண்மையைக்கூறினர். அத்தோற்றமும் அந்நிமிடமே மாறியது. அடிகள் தாம் சமாதியானபின் கொண்டருளப்போகும் பிற்காலத்திய விழாக்களின் வைபவத்தையும் ஆலய அமைப்பையும் அந்தணர் வாயிலாக அன்பர்கட்கு அறிவுறுத்தினர் போலும்.

இராமைய அடிகளின் சமாதியாலயத்திற்கு வடபுறமாயுள்ள இவ்விராம தீர்த்தத்தில் அடிகள் சமாதிநிலையுற்ற மங்களதினமாகிய பானுவாரத்தில் விதிப்படி மூழ்கி திருவருட்சமாதியை வலம் வந்து பணிவோர் இம்மையிற் சகலபாக்கியங்களையும் சற்புத்திரப்பேற்றையும் பெற்று மறுமையில் இறைவன்றிருவடியின்பத்தையும் பெறுவர். தினந்தோறும் மூழ்குவோர் தீவினைகள் யாவற்றையும் கடப்பர். வருடந்தோறும் சித்திரைமாதத்தில் வரும் அடிகளின் குருபூசா தினத்தன்று இத்தீர்த்தத்தில் மெய்யன்புடன் விதிப்படி மூழ்கிக் குருபூசா மகோத்ஸவத்தைத் தரிசிப்போர் இம்மையில் மனதிலெண்ணிய வெண்ணியாங்கெய்தியின்புற்று மறுமையில் வீட்டின்பத்தை யுந்தலைப்படுவர்.

இராமதீர்த்தம், பிரமதீர்த்தம், ஞானதீர்த்தம், செங்கழு நீரோடை ஆகிய இப்புண்ணிய தீர்த்தங்களில் சோமவாரம் மாதப் பிறப்பு அமாவாசை சூரியகிரகணம் சந்திரகிரகணம் வருடப்பிறப்பு உத்தராயணம் முதலிய புண்ணிய காலங்களில் மெய்யன்புடன் விதிப்படி மூழ்குவோர் பெறும்பயனை யாவரே யெடுத்துரைக்க வல்லார்! அவர்கள் இம்மை மறுமையாகிய இரண்டிடத்தும் இன்னலின்றி இன்பத்தையனுபவிப்பார்கள்.

திருச்சிற்றம்பலம்.

## மூர்த்தி விசேடம்.

மெய்யன்புடன் பூசித்து வணங்குவோர்க்கு மலநீக்கமருளித் திருவடியின்பத்தையுதவும் மூர்த்தி விசேடத்தை இனிக்கூறுவாம். பிரமபுரீசுரரின் பெருமையை முன் தலவிசேடத்திற் கூறினோம். இனி இராமைய அடிகள் சிவலிங்காகாரமாய் எழுந்தருளியிருக்கும் இராமலிங்கமூர்த்தியின் விசேடத்தையும், சுசிவர்ன விநாயகப் பெருமானுடைய விசேடத்தையும் ஈண்டுச் சிறிது கூறுவாம்:

இராமைய அடிகள் திருவருட் சமாதியில் பிரதிட்டை செய்து பூசிக்கப்பெறும் இராமலிங்கப்பெருமானுடைய அற்புத மகிமையை அளவிட்டுரைக்கவல்லார் யாவர்!

இலக்குமி என்னும் பெயர் கொண்ட ஒரு நரை மூதாட்டி இவ்விராமலிங்கப் பெருமானை நாள்தோறும் வலம்வந்து பேரன்புடன் வணங்கிவரும் நியமம் பூண்டவளாய்ப் பேரணிப்பட்டியில் வாழ்ந்து வருவாளாயினள்.

இந்நியமத்திற்றவறாது ஒழுகும் இப்பெரியாள், வழக்கம்போல் ஒருதினம், திருவருட் சமாதியை வலம்வந்து சந்நிதானத்தின் படியோரத்தின் கீழ் விழுந்து வணங்கும் பொழுது, படியில் நின்றும் ஒருசர்ப்பந்தோன்றிப் படம் விரித்து, வணங்கிக் கொண்டிருக்கும் முதியாளுடைய தலையில் மும்முறை கொத்தியது. அத்துன்பத்தைப் பொறுக்கலாற்றாத அம்முதியாள், தனது தலையில் சர்ப்பந்தீண்டிற் றென்பதை யறிந்து, உடனே இராமலிங்கப்பெருமானுக்கு அபிஷேகிக்கப் பெற்ற தீர்த்தத்தை வாங்கித் தலையிற்றெளித்துக் கொண்டும், பெருமானுடைய விபூதிப் பிரசாதத்தைப் பெற்று உட்கொண்டு நுதலிலணிந்து சிரத்தில் நீவியும், சந்நிதியில் வீழ்ந்து மீண்டும் வணங்கித் துதித்துச் சென்றனள். நரைமூதாட்டியின் பேரன்பிற்கிரங்கி இராமலிங்கப்பெருமான், விஷவேகத்தை அறவே மாற்றியருளினார். திருவருட்செல்வராகிய இராமைய அடிகள் சிவலிங்காகாரமாக எழுந்தருளிய பின்னரும் தம்மை மெய்யன்புடன் வணங்கும் அன்பர்கட்குற்ற இடுக்கண்களை நீக்கியும், இட்டகாமியங் களையுதவியும், இவ் வாறு திருவருள் பாலிக்கின்றனர்.

முற்காலத்தில் இக்கடம்பாரண்ய க்ஷேத்திரத்திற்கு நேர் நிருதி திசையில் ஏழுகடிகை தூரத்தேயுள்ள சிவகங்கையென்னும் நகரத்தில் அரசு வீற்றிருந்த சசிவர்னன் என்னும் பெயர் புனைந்த அரசன், ஒருநாள், கானகங்களில் வேட்டையாடி இக்கடம்பாரண்யத்திலிளைப்பாற வந்து தங்கினான். தங்கிய அரசன், தனது குடிகளிற் சிலரை இத்தலத்திலிருத்தவேண்டி, பிரமபுரீசுரர் ஆலயம், பிரம தீர்த்தம் ஆகிய இவைகட்கு நேர் நிருதிதிசையில், ஒரு கூப்பிடு தூரத்தேயுள்ள அடர்ந்தகாடுகளை வெட்டிப் பண்படுத்த, ஆட்களையேவி யமர்ந்திருந்தனன். ஏவலாளர் சென்று காடுகளை வெட்டியழித்து, நிலத்தை யகழ்ந்து, பண்படுத்துங்கால், பூமியினின்றும் பிரணவ சொரூபியாகிய விநாயகப் பெருமான், அழகிய திருவுருவத்துடன் தோன்றி யருளினார். அதைக்கண்ட ஏவலாளர்கள் விரைந்தோடிவந்து காவலனுக்கு விண்ணப்பித்து, அழைத்து வந்து காட்டினர். சசிவர்ணன் என்னும் அரசன் இயற்கையிலேயே சிவபக்தி அடியார் பக்திகளிற் சிறந்த சீலமுடையோனாதலால், விநாயகப் பெருமானுடைய திருவுருவத்தைக் கண்டு கரைகாணாக்களிப்புற்றவனாகி, 'நமக்குக் காட்சிகொடுத்தாட்கொள்ள வேண்டியே இவ்விநாயகப் பெருமான் ஈண்டு எழுந்தருளினார்' எனக் கருதிப் பேரன்புடையோனாய்த் தனது பெயரையே அப்பெருமானுக்குச் சூட்டிச் 'சசிவர்ன விநாயகர்' என மும்முறை கூறியழைத்து, ஆனந்த பரவசனாய்த் துதித்து வணங்கி, அப்பொழுதே அதே இடத்தில் ஆலயம் அமைத்துக் கும்பாபிஷேகமியற்றி, பூசைக்குச் சில நிலங்களும் மானியமாக உதவி, தான் முதலிற் குறிப்பிட்டபடியே தனது குடிகளிற் சிலரையும் ஆலயத்தைச் சூழ இருக்குமாறியற்றிச் சென்றனன்.

அதுமுதல் சசிவர்ன விநாயகப் பெருமான், பிரமபுரீசுரர் ஆலயத்துக்கு நேர் நிருதிதிசையில் ஒரு குரோசவெல்லையில் சசிவர்னன் என்னும் அரசனால் அமைக்கப்பெற்ற ஆலயத்திலெழுந்தருளி, தன்னை மெய்யன்புடன் பூசித்து வணங்கும் அடியார்கட்கு வேண்டிய சித்தி முத்திகளை யுதவியருளுகின்றார்.

அநேகர் இச் சசிவர்ன விநாயகப்பெருமானை அபிஷேகாதிகளியற்றி யர்ச்சித்து, நிவேதித்துப் பூசித்து வேண்டிய இட்ட சித்தி

களைப் பெற்றனர். மெய்யன்புடன் இச் சசிவர்ன விநாயகப்பெருமானைப் பூசித்து வலம்வந்து பணிவோர் சகல விக்கினங்களும் நீங்கப் பெற்றவர்களாய் விரும்பிய யாவும் கிடைக்கப்பெற்று வாழ்வார்கள் என்பது உறுதியாம்.

திருச்சிற்றம்பலம்.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவவதாரப் படலம்.

பூவினுட் கமலம் போலும் புருடருட் டிருமால் போலும்
காவினுட் கற்பம் போலுங் கலைகளுள் ஞானம் போலும்
ஆவினுட் சுரரான் போலும் அறத்துளில் லறமே போலும்
நாவினுள் மெய்நாப் போலும் நாட்டினுட் சோழ நாடு.

எனத் தொன்னூற்பனுவற் றுணிபொருள் உணர்ந்த பன்னருஞ் சிறப்பிற் பாவேந்தர் போற்றும் சோழவளநாட்டில், திருமறைக் காடென்னும் வேதாரணியத்தில், இற்றைக்கு (உா) இருநூறுவருடங் கட்கு முன்னர், தாசரிகுலத்திற் றோன்றிய கோவிந்ததாசரியாரிழைத்த தவம் உருக்கொண்டன்ன தகையராய், சுப்பையதாசரியென்பார் ஒருவர் இருந்தனர். இவர் ஆயுர்வேத முறையை அளந்தறிந்த பண்டிதர், அளவிலாப்பொருட் பெருக்குடையவர், ஆலிலையிற் றுயில் அஞ்சனமேனியண்ணலின் அம்போருகத் திருவடிக்கண் ஆழ்ந்தமைந்த அன்பினர், அறம்பயில் நடையினர் ஆவர். இப்பெரியார், சிவபெருமான் தில்லையம்பதியிற் றிருநடம்புரிதல்போற் சிவகாம சுந்தரிகண்டு களிப்பத் திருநடம் புரிந்தருளுகின்ற காரணத்தால், 'தில்லைவளாகம்' என்னும் காரணப்பெயருடன் விளங்குவதும் இராமபிரான் கோதண்டபாணியாய் இளையபெருமாள் சீதாபிராட்டியார் ஆஞ்சநேயர் சமேதராயெழுந்தருளி யிருக்கப்பெற்றதும் ஆகியு

தலத்தில்வந்து, அந்நகரிற் றிருமணஞ் செய்துகொண்டு, மீண்டு தனது நகரத்திற்கேகி, அறத்தாற்றின் இல்வாழ்க்கையாற்றி வாழ்ந் திருந்தனர். தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்றாங் கைம்புலத்தாறோம்பி, துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க் கும் துணையாய் இல்லறம்நடாத்தும் இச்சீரியர், பன்னாட் புத்திரப் பேறின்றி "இம்மையின்பொடு மறுமையின் இன்பம் என்றிரண்டும் அம்மென்மைந்தரை யில்லவர்க்கில்லை" என்ற அறவுரையைச் சிந் தித்து வருந்தி, 'மறுமணஞ் செய்யின் மாதவன் அருளால் மைந்தர் உண்டாவர்' எனச் சோதிடநூல் வல்லார் கூறக்கேட்டு, அவ்வாறே தொண்டைமான் புதுக்கோட்டையைச் சேர்ந்த கடியாபட்டி யென் னும் இராமசந்திரபுரத்தில் நயினார் தாசரியின் புதல்வி பொன்னம் மாளென்னுங் கன்னிகையை யிரண்டாவதாகத் திருமணஞ் செய்து கொண்டனர்.

சின்னாட் சென்றபின்னர், சுப்பையதாசரியாரின் இரண்டாவது மனைவியாகிய பொன்னம்மாள் எனும் புனிதவதியார் தனது மணி வயிற்றில் மாண்புறுங் கருப்பமெய்தி, பத்துத்திங்களும் நிறைய, ஓர் மங்கலதினத்தில் வலம்புரியாயிரஞ் சூழ்ந்த சலஞ்சலம் என்னும் சங்கமானது தன்னிணையில்லாத் தனியொளிபரப்பும் ஒண்ணித் திலத்தை யுதவுதல் போல ஓர் ஆண்மகவீன்றனர். அவ்வேளையில் ஆர்கலிபொங்கி யாரவாரித்தது. சங்கங்களெல்லாந் தாமே முழங்கின. விண்ணவர் மகிழ்ந்து பொன்மலர்மாரி தூற்றிப்புகழ்ந்து மகிழ்ந்தனர். ஈன்றாரிருவரும் எய்திய இன்பத்தையாரே கூறவல்லவர்!

கரைகாணாக் களிப்பெனுங் கடலினுள் ஆழ்ந்த அன்னை தந்தை யரிருவரும் தங்களருந்தவப் புதல்வனுக்கு இராமையாவென நாமம் புனைந்து சிறப்புடன் வளர்த்து வருவாராயினர். இராமையாவெனும் இருந்தவச் செல்வரும் ஈன்றார்கண்டு களிப்பச் சதங்கை யணிந்த தாளசைத்து விரல் சுவைத்து மெல்லணையிற் கிடந்தும் கவிழ்ந்தும் இருந்தும் தவழ்ந்தும் எழுந்தும் நடந்தும் மழலை மொழிந்தும் கூடற் கின்பம் மருவ ஓடி மேல்விழுந்து தழுவியும் இவ்வாறின்பம் அருளி வளர்ந்து ஐந்தாண்டெல்லையை யணுகினர்.

இராமையவடிகள் ஐந்தாவதகவை யடைந்தபின்னர் பொன்னம்மாள் எனும் பொன்னனையார் மீண்டுங் கருவடைந்து ஐயிருமதியமும் அகல ஓர் ஆண்மகவளித்தனர். சுப்பையதாசரியார் கழிபேருவகையெய்தித் தனது இரண்டாவது குமாரனுக்குச் சித்தாதியெனத் திருநாமம் புனைந்து சிறப்புடன் வாழ்ந்துவந்தனர். சித்தாதியென்னுஞ் செல்வர்தோன்றிய இரண்டாவதாண்டில் சுப்பையதாசரியார் இவ்வுலகவாழ்க்கையை நீத்துத் தாமரைக்கண்ணான் உலகைச்சார்ந்தனர்.

சுப்பையதாசரியாரின் மனைவியாராகிய பொன்னம்மாள் தனதாருயிர்க்காதலன் விண்ணுலகுற்ற விழுமத்தால் ஆற்றொணாத்துயரடைந்து வருந்தி ஆண்டுள்ளோர் தேற்றச் சிறிதுதேறி மூத்தபுதல்வராகிய இராமைய அடிகளைக்கொண்டே ஈமக்கடன் முதலிய உத்தர கிரியைகளை யெல்லாம் வழுவறப்புரிவித்து மனமாழ்கிச் சின்னாட் சென்றபின்னர் தன திருபுதல்வர்களுடனுங் கைப்பொருள்களுடனும் கடியாபட்டியிற் றனது தாய்வீடுவந்து சேர்ந்தனர். இராமையவடிகள் தமது மாதுலராகிய பங்காருதாசரியார் இல்லத்தில் ஐந்தாண்டெல்லையினராகுஞ் சித்தாதியென்னுஞ் சகோதரருடன் வளர்வாராயினர்.

திருச்சிற்றம்பலம்.

---

சிவ
திருச்சிற்றம்பலம்.

# திருமணப்படலம்.

சிந்தை தோயுமைம் பொறிகளும் புறஞ்செலாச் சித்தஞா னனந்த
வெந்தை யாமிரா மையவேட் கொருமண மியற்றிய பெருஞ்சீர்த்தி
வந்த வாறுரைக் குதுமெனு மாசையென் மதியினை வலிந்தீர்ப்ப
வுந்து மன்பினுற் சிறிதள வுரைத்திடற் குணர்வுளோர் இகழாரே.

இவ்வாறு சின்னாட்செல்ல, இராமையவடிகள் பதினொன்கு பிராயமுற்றனர். அடிகளின் மாதுலராகிய பங்காருதாசரியார் தனதருந்தவத்தினையாள் புதல்வரை அன்புடன் பாதுகாத்து வருகின்றவராகலின் மூத்த மருகராகிய இராமையவடிகள் திருமணப் பருவ

மெய்தினமையையறிந்து மகிழ்ந்து தனதரும் பெரும் புதல்விமாரிருவருள் மூத்த புதல்வியாகியமலர்மகட்கிணையென வழுத்தும் வேங்கடசுப்பம்மாளை அடிகட்குத் திருமணம் புணர்த்திவைக்குஞ் சித்தமுடையராய் மனைவியாருடனும் தங்கையாகிய பொன்னம்மாளுடனும் மற்றைய உறவினருடனும் கலந்தாலோசித்து முடிவு செய்து, திருமணஞ் செய்தற்குரிய நல்லோரை வாய்ந்த மங்கலதினம் ஒன்றைக் குறிப்பிட்டு மணவோலை வரைந்து மணநாள் அணுகுதற்கு முன்னரே உறவினர்கட்கெல்லாம் மணவோலையனுப்பி அந்நக[illegible] மாளிகைகளையும் அலங்கரிப்பாராயினர்.

அந்நகர மாதர்கள் அணிந்து நீக்கிய நறுமலர் மாலைகளும் சந்தனக் குறுந்துகள்களுமாகிய, வீதிகளின் குப்பைகளைக் களைந்து வீசி, குளிர்ந்தபனி நீர்கள் தூவிப் பூழியடக்கி, மாளிகைகளின் சுவர்த் தலங்கட்கெல்லாம் வெள்ளை புதுக்கி, அவைகளிற் சிற்ப நூல் வல்லாருங் கண்டு பெட்புறும்படி ஓவியங்களை வரைந்து, திண்ணைகளிற் குங்குமக் குழம்பு நீவி, தானியங்கள் விதைத்த பாலிகைகளையும் மாவின் றழை விரிந்த நீர் நிறைத்த பொற்குடங்களையும் நிறைபடப் பரப்பி, வாயில்கடோறும் மங்கல தோரணங்கள் பரவ வீக்கி வீதிகளில் நெடுநடைக் காவணங்கள் அமைத்து, அக்காவணங்களில் பாளைவிரிந்த கமுகு சுவைக்கரும்பு பழுக்குலை வாழை இவைகளை வரிசைபட வமைத்து, மேற் பாகங்களில் விதானங்களையும் பன்னிற ஆடிகளையுங் கோத்தணிந்து, காவணங்களின் மேல் நிலைகள் தோறும் பல்வேறு நிறம் பெற்ற கொடி வரிசைகளைச் சூழ நிறுத்தி இவ்வாறலங்கரித்தனர்.

அந்நகர மாந்தர்கள் யாவரும், இராமைய அடிகளின் றிருமண நாள் என்று அணுகும் என்றெதிர்பார்த்தவர்களாய்த் தங்கள் தங்கள் மனைகளை யெல்லாம் மணம் நடைபெறும் மனையென அலங்கரித்து, திருமண விழாவைத் தரிசிக்க வரும் அடியார்கட்கும் பெரியோர்கட்கும் எளியோர்கட்கும் வேண்டிய வேண்டியாங்கு இனிய வுணவீந்தும் ஆடை அணிகலன் அளித்தும் இவ்வாறு மகிழ்ச்சியுட் டிளைப்பாராயினர்.

பங்காரு தாசரியார் தனதருந்தவத்திளையாள் புதல்வராகிய அடிகள் திருமணங்கொண் டருளுதற்குத் தனதாண்மனையைச் சூழ

நாற்றிசையினும் பரந்து விண்ணளாவுமாறு அழகுறுங்காவணம் அணிமண்டபம் என அமைத்து, அக்காவணம் உள்ளிட்ட மேற் பாகங்களில் பன்னிறப்பட்டு விதானங்களையும் பஞ்சவர்ன ஆடிகளையும் பதுமைகளையும் வெவ்வேறமைந்த பழக்குலைகளையும் அடுக்கடுக்காக ஆர்த்து, காவணக்கால்கடோறும் கரும்பு கமுகு வாழை முதலியவைகளைச் சேர்த்தி, பன்னிறமணிக் கோவைகளை யாங்கணும் பரவ நாற்றி, காவணமுள்ளிட்ட பூமியை நறுமணமிக்க சந்தனம் குங்குமம் கஸ்தூரி அகில் முதலியவற்றைப் பனிநீரிற் றோய்த்துச் சேறு செய்தமைத்த குழம்பால் மெழுகி, அட்ட மங்கலப் பொருள்கள் அமைத்து, பதுமையேந்திய பாவை விளக்குகளை நிறையவேற்றி, அம்பொற் பாலிகைகளையும் மங்கல கும்பங்களையும் நிறைத்து, நவமணி குயிற்றிய இரத்தினக் கம்பளங்களைத் திருமண வேள்வி நடைபெறுமிடத்து விரித்து, அவ்விடத்து வேதிகை ஓமகுண்டம் இவைகளை மேகலையொடும் பொருந்த மறையுரை முறையின் வழுவுறுதியற்றி, அடிகள் மணமகளோடமர்ந் தருளுதற்குரிய பசும்பொற் சிம்மாதனத்தின் நாற் புறத்தும் பவளக்கால் நிறுவி, அக்கால்களின்மேற் கவித்தியற்றிய மேற்கோளகையில் வாள்விடு செம்மணி வயிரம் பதித்து, சுற்றிலும் அரதன மாலைகளையும் அணிமலர் மாலைகளையும் நாற்றி, எவ்விடத்தும் சர விளக்குகளும் சுடர்மணித் தீபங்களும் நிறைந்து ஒளிகான் றிலங்கிப் பகலவனென விருள்கால் சீத்து இம்பரே யன்றி உம்பருஞ் சென்று மிளிர்தர இவை முதலிய பல பன்னரும் அணிகள் பலபடப் புரிந்தனர்.

உறவினர்கள் யாவரும் நிறைந்து திருமண் நாளின் முதற்றினமே வந்து கூடினர். நல்லோரை வாய்ந்த மங்கல தினமாகிய திருமண விழா நடைபெறுங் கல்யாண தினத்தன்று காலையில் எம்மை யாளும் இராமைய அடிகட்கு மங்கல் வாத்தியங்கள் முழங்க, குளிர்ந்த சுகந்த பனிநீராளவிய மங்கல நீராட்டி, நுதலிற் றிருவெண் காப்பணிந்து, சந்தனத் திலதமும் அதன்மேற் குங்குமத் திலதமுந் தீட்டி, இடையில் உயர்ந்த வெண் பட்டாடை வீக்கி, அதன்மேல் பசும் பொன்னூலாகிய இரட்டை யரைஞாண்பட்டிகையிறுக்கி, சுகந்த மலர் மாலைகளைக் குஞ்சியிற் சூட்டி முடித்து, இரு செவிகளினுஞ் செஞ்சுட ரிசண்டு

சேர்ந்திருந்தாலெனச் செம்மணிக் குழையணிந்து, கழுத்தில் உயர்ந்த
முத்துக்களானாகிய கண்டிகை புனைந்து, மார்பு நிறையப் பன்மணி
மாலைகளும் பசும்பொனாரமும் பதக்கமும் பரவ வேய்ந்து, புயங்களில்
வாகு வலையமும் உயர் பொற் சரிகையாற் சமைத்த உத்தரீயமுஞ்
சாத்தி, விரல்களில் மந்திர பவுத்திரமும் மணியாழிகளும் மாண்புற
மாட்டி இவ்வா றலங்கரித்து, மங்கல தூரியமார்த்தெழ, மாதர்கள்
மணிக்கவரி வீச, மணமண்டபத்திற் கழைத்துச் சென்று, மணவறையி
னமைத்த உயர் பொற் சிம்மாதனத்தில் எழுந்தருளச் செய்தனர்.

மணமகளாகிய வேங்கட சுப்பம்மாள் எனும் பெருந்தவக்
கொடியை மகளிர் பலர் சூழ்ந்து திருமஞ்சனச் சாலைக்கு அழைத்துச்
சென்று, நானமணிந்து, குங்குமச் சேறப்பி, மஞ்சட் காப்பணிந்து,
குளிர் பனி நீரால் ஸ்நானஞ் செய்வித்து, நுதலிற் றிருவெண் காப்
பும் குங்குமத் திலதமுந் தீட்டி, இடையில் உயர் பசும்பொற் பட்
டாடை யணிந்து அதன் மேற் பன்மணி பதித்த ஒட்டியாண மிறுக்கி,
சீறடிகட்குச் செம்பஞ்சுக் குழம்பு நீவி, நூபுரம் பாதசாலம் கிண்கிணி
சதங்கை முதலியன அணிந்து, கூந்தலில் வாசக் காசறை மலியப்
பெய்து, பின்னிப் பின்னுறவிடுத்து, உயர் மணமலர்த் தொடை
யணிந்து, வாள்விடு வயிர வட்டத் தகட்டணி, வானிரு சுடர்ப்பெயர்
வயங்கிடுகலன்கள், நுதலணிமாலை நெற்றியிற் பதக்கம், இவை முதலிய
திரு முடியணியெலாஞ் சேர்தரப் புனைந்து, செவிக்கணிகலன்கள்
திகழ்வுறப் பூட்டி, குமிழ்மலர் நாசியிற் கோப்புறப் புனைந்து, சங்
கெனுங் கழுத்தில் சார்வுறு மணிகள் பொங்கிட வீக்கி, அங்குலி
கட்கெலாம் ஆழிகள் மாட்டி, காப்பு கடகம் தொடி முதலிய அணி
களைப் புயங்களிற் பூட்டி, மரகத மாலை வயிரமாலை வித்துரும மாலை
அம்பொன் மாலை செம்மணி மாலை தரளமாலை இவை முதலிய மாலை
களைப் பதக்கத்துடன் பரவ மார்பிலணிந்து, இன்னும் உரைப்பரும்
அணிகள் சிறப்புறச் செய்து, மங்கல மாதர் எங்கணுஞ் சூழ்ந்து பல்
லாண்டிசைப்ப மண மண்டபத்திற் கழைத்துச் சென்று இராமைய
அடிகளின் பக்கத்தே யமர்வித்தனர். மண மண்டபத்தில் மணவறை
யில் உயர் பசும் பொற் சிம்மாதனத்து அடிகளும் அம்மையாரும்
அமர்ந்திருந்த காட்சி இராம பிரானும் சீதா பிராட்டியாரும் எழுந்

தருளி யிருந்த காட்சியை நிகர்த்துக் கண்டவர்கட் கானந்த மூட்டி யது.

ஆய போது திருமண வோரை வந்தடுப்ப, பங்காரு தாசரியார் தனை மறந்த மகிழ்ச்சி தலைசிறப்ப மனைவியாருடன் எழுந்து சென்று இராமைய அடிகளின் றிருவடிகளையம்பொற் கரகநீரால் அபிஷேகித்து வாசச் சாந்தமும் மான்மதச் சேறும் அப்பி, நறுமலர்களால் அர்ச்சித்து, தூபதீபாதிகளால் உபசரித்துத் தன தருந்தவப் புதல்வியை யங்கீகரிக்குமாறு பிரார்த்தித்து, அடிகளின் றிருக்கரத்தில் மணமகளின் கரத்தையமைத்து, மறைமனு வோதிக் கரக நீர் வார்த்து, பசுவின் பால் பழம் தேன் நெய் சருக்கரையாகிய இவைகளானியற்றிய மதுபருக்கத்தை மணமக்கட்குண்பித்தனர்.

புரோகிதர் மறை முறையின் வழுவுறாது ஓமகுண்டத்தில் தெய்வச்செந்தீ வலம்பட நிமிர்ந்தெழ, அக்கினி தேவனுடைய காளி, கராளி, மனோஜவை, சுலோகுதை, சுதூம்பரவருணை, ஸ்புலிங்கினி, விசுவரூபி என்னும் ஏழு நாக்களில் நாடுநாவாகிய சுலோகிதையிற் பொருந்தத் துடுவையால் நெய்நிரப்பி வளர்த்தனர்.

ஓமத் தீப்புகை யும்பர்நாடளாவ, சுற்றிலும் அந்தணர் நான் மறைகளார்ப்ப, மங்கல வாத்தியங்களும் வலம்புரிச் சங்கங்களும் முழங்க, அடியார்களும் பெரியோர்களும் உறவினர்களும் அறிவோர்களும் குங்குமத் தோயந் தோய்ந்த மஞ்சள் அரிசிகளையும் மலர்களையும் வீசிச் சய சயவென ஆசீர்வதிக்க, மாதர்கள் மங்கலம் பாடிப் பல்லாண்டிசைப்ப, விண்ணவர் மகிழ்ந்து பொன்மலர் மாரி தூற்ற, இராமைய அடிகள் வேங்கட சுப்பம்மாள் எனும் விளங்கிழை கழுத்தில் மங்கல நாண் சாத்தி அங்கைத்தளிர் பற்றினர். யாவரும் இவ்வானந்தக் காட்சியைக்கண் டகமகிழ் சிறந்தனர்.

அதன்பின்னர் இராமைய அடிகள் மனைவியுடனெழுந்து இரு கைகளினும் நிறையப் பொறிவாங்கிச் செந்தீநாமடுத்து, அறிவோர்க்குத்தக்க தானங்களுதவி, எரிவலம் வந்து மங்கலத் தொழில்புனைந்த அம்மிமேல் மணாட்டி பாதத்தை யமைத்து வசிட்டன் றேவியாம் வனிதையைக் காட்டி விதிவழிவழாது மற்றைய வேள்விச் சடங்குகள்

யாவு முடித்து மணமண்டபத்தி லெழுந்தருளினர். அன்றிரவு அடிகள் வீதியுலாப்போந்த காட்சியை விரிக்கிற் பெருகுமென் றஞ்சி விடுத்தாம். மணவிழாவிற்கு வந்தவர்கள் அனைவரும் வானவ ருணவினும் மலிந்த சுவையுணவருந்திச் சுகந்தமணிந்து உயர்பட்டாடையணிகலன் பெற்று மகிழ்விடைகொண்டு சென்றனர். இராமையஅடிகள் மனைவியாருடன் மாமனில்லத்து வதிந்தனர்.

திருச்சிற்றம்பலம்.

---

உ

சிவகுகமயம்.

திருச்சிற்றம்பலம்.

# வெளியேறு படலம்.

## உலகநாத சுவாமிகள் வரலாறு.

நீலச் சிகண்டியில் நீங்கிடாதமருங் கோலத்துட னெங் குமரவேளுறையுந் திருப்புல்வயல் எனுந் திவ்வியதலத்தில் சுமார் இற்றைக்கு (௱௩௰௫) நூற்று முப்பத்தைந்து வருடங்களுக்கு முன்னர் சுப்பிரமணியபிள்ளையென்பார் தனது ஒப்பாருமில்லாக் குப்பாயி யென்னுங் குலமனைவியாருடன் அளவிலா தியற்றிய அருந்தவப் பேற்றால் சுகப்பிரமமே தோன்றினுரென வொரு பெரியார் திருவவதாரஞ் செய்தருளினர்.

இப்பெரியார் இளமையிலேயே ஆதிபராசத்தியாகிய உலகநாயகியம்மையின் றிருவருள்பெற்று மெஞ்ஞான மூர்த்தியாய் உலகநாதசுவாமிகள் எனக் காரணவபிதானங்கொண்டு தன்னைப் பிறர் அறியாதவாறு உலக நடையினர்போன்று கிராமக்கணக்கரா யமர்ந்திருந்தனர்.

இப் பெரியார் ஒருதினம் தம்மோடொத்த மற்றைய கிராமக்கணக்கர்களுடன் அமர்ந்து தமக்கு மேலதிகாரியின் முன் கணக்குமுடித்துக்கொண் டிருக்குஞ்சமையம் பொன்னம்பலத்தில் ஆனந்த

நடேசப் பெருமான் முன்னருள்ள திரைச்சீலையிற் றீப்பிடித்துக் கொண்டதாகக் கூறித் திரைச்சீலையைக் கசக்குவார்போன்று பதை பதைப்புடன் றமது மேலாடையைக் கையினாற்றேய்த்தனர்,

இக்காட்சியை மேலதிகாரிமுதலியாவருங்கண்டு வியப்படைந்து, 'என்னே! இவர் பித்துற்றனரோ'வென வெண்ணி யையுற்று, சிதம் பரத்தில் சிற்சபைக் கூத்தன்முன்னுள்ள திரைச்சீலையிற் றீப்பிடித்த துண்மையே யென்றும், அவ்வமயம் அடிகள் சிதம்பரத்தில் ஆனந்தக் கூத்தன் றிருமுன்னர் நின்று தரிசித்துக்கொண்டு நின்றவர் திரைச் சீலையிற்பற்றிய தீயைக் கையினாற் றேய்த்தணைத்தனர் என்றும் ஒற்ற ரால் உசாவியறிந்து, ஒரே நேரத்தில் சிதம்பரம் சிற்சபையினும், புதுக்கோட்டைச் சமஸ்தானத்திற் சமாபந்தியிற் கணக்குமுடிக்கு மிடத்தினும் அடிகளிருந்தாற்றிய அற்புதச் செயலையுன்னி அஞ்சி யடிபணிந்தனர். அதன் பின்னர் அதிகாரியாயினோர் ஞானானந்த மூர்த்தியாகிய உலகநாத அடிகளின் றிருவடிகளிற் பணிந்து, 'அருட் பெருமூர்த்தியே! அடியேன் தங்கள் பெருமையைச் சிறிதுமறியாமல், ஏனைய கணக்கர்களுடன் தங்களையும் ஒருவராக மதித்து ஏவ வியற்று மா றிழைத்த மாபாதகச்செயலை மன்னித்தருள வேண்டுமெனப் பிரார்த்திக்க, அடிகள் புன்னகையினராக வெழுந்து அவ்விடத்தை விட்டு நீங்கி வெளிப்போந்து சிவகங்கை யென்னும் நகரத்தைச் சேர்ந்தனர்.

(அடிகளின் றிருவவதாரம் நளவருடம் ஆகலானும், சிவகங் கைக்கு எழுந்தருளியது சர்வசித்து வருடமாகலானும், அஞ்ஞான்று அடிகட்கு வயது (௩௰௧) முப்பத்தொன்று ஆகும். முப்பத்தொரு வயது வரையில் இல்லறத்தே யிருந்ததாக யூகிக்கப்படுகின்றது. திருமண முதலியவற்றின் விருத்தாந்தம் ஒன்றும் புலப்படவில்லை.)

சிவகங்கையில் வீரமாகாளியம்மையின் உபாசகராய், பரிபக்குவ நிலையினராயிருந்த பொன்னையாச்சுவாமி யென்னும் பெருந்தகை யாளர் அடிகளை இந்நிலையினரெனவறிந்து, அடிமையாக அன்னா வர்க்கு அருள்சுரந்து அனுக்கிரகித்தும் அந்நகரிலே யமர்ந்தும் அடுத்த மற்றையவூர்களினுஞ் சென்றும் அளவிறந்த அற்புதத்

திருவிளையாடல்க ளியற்றியருளினர். இவ்வாறு (௩௰௧) முப்பத்தொரு வருடஞ்செல்ல, தமது (௬௰௨) அறுபத்திரண்டாம் வயதில் அதாவது காலயுத்தி வருடத்தில் புதுக்கோட்டைக்கு எழுந்தருளி அக்காலத்தில் அந்நகரில் அரசுவீற்றிருந்த இராமச்சந்திர மகாராசா வென்னும் அரசர் கோமானால் அன்புடன் அடிவணங்கப்பெற்று, அரசற்கு வேண்டிய இட்டகாமியங்களை யுதவி யெழுந்தருளி யிருந்தனர்.

உலகநாத அடிகள்பால் ஞானோபதேசம்பெற்ற சிவகங்கை பொன்னையாச்சுவாமிகள் அடிகள்மேற் பாடியருளிய பாக்கள் அள வின்றியுள்ளன. அவற்றுள் ஒருபாடலை அன்பர்கள் அறியவேண்டி யீண்டுத் தருகின்றோம்.

உ

சிவகுகமயம்.

திருச்சிற்றம்பலம்.

(இருபத்து நான்கு சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.)

அங்கமிகு மானநள வருடம்புல் வயலிலே
யமர்சுப்ர மணியபிள்ளை
யருந்தவ மிருந்துகுப் பாயிதிரு வுந்தியில்
அவதரித் தந்நகரிலே
அழகாக நாட்டுக் கணக்கெழுதி யுலகநா
யகிபதத் தன்புகூர்ந்தங்
கவளருளி ஞற்சுத்த மெஞ்ஞான நிலைபெற்றும்
ஐயா றிரண்டுவருடம்

பொங்கமிகு வாய்ச்சருவ சித்திவரு டத்திலே
புளகிதம தாயெழுந்து
புதுமையாய்ச் சிவகங்கை நகர்வந்து வீரமா
காளியிரு பொற்பதத்தைப்
போற்றிவளர் பொன்னையன் கண்டடிவணம் யர்கிடப்
பூவுல கெலாந்துதிக்கப்
பொருந்தியதில் மூன்றுபத் தொருவருட முஞ்சென்று
போய்க்கால யுத்திவருடம்

எங்கும்ப்ர காசமாய்ப் புதுவைமா நகருக்
கெழுந்தருளி யேழுவருடம்
இந்திர னெனுமிரா மச்சந்த்ர மகராசன்
இணையிலாப் புண்ணியத்தால்
இணையடி வணங்கவும் சகமெலாம் புகழவும்
ஏற்றவர முங்கொடுத்தே
இயல்புறு குரோதன சம்வற் சரத்தினில்
இனியபங் குனிமதியினில்

துங்கமிகு தேதியிரு பத்தெட்டி லாதித்த
வாரமுஞ் சூரியன்போய்த்
தோன்றுநா ழிகைபன் னிரண்டினில் உத்திரா
டத்தமர பக்ஷநவமி
சுகாதீத வஸ்துலக் நாதகுரு பரன்மிகுஞ்
சொல்லொணாப் பேரின்பமாய்த்
தோற்றமீ றின்றியே சுட்டிறந் தெங்குமாந்
தொன்னிலை யடைந்தனனரோ.

இச்செய்யுளால் உலகநாத சுவாமிகள் புதுக்கோட்டையில் சாலிவாகன சகாப்தம் ௲௭௱அ௰௭ம் வருடமாகிய குரோதன ஆண்டு பங்குனித்திங்கள் இருபத்தெட்டாம் நாள் ஞாயிற்றுக்கிழமை அமர பக்ஷம் உத்திராட நக்ஷத்திரம் இரவு பன்னிரண்டு நாழிகைக்குமேல் நவமிதிதியில் திருவருள் நிலையடைந்தனர் எனத் தெரியவருகின்றது.

திருச்சிற்றம்பலம்.

# மெஞ்ஞான நிலையுறுதல்.

நமது கதாநாயகராகிய இராமைய அடிகள் மகட்கொடையளித்த மாதுலராகிய பங்காரு தாசரியார் வைத்தியமுறைக்குச் செல்லும் இடங்கட்கெல்லாந் தாமுங்கூடவே செல்லும் வழக்கமாகலின் அவ்வாறே ஒருநாள் மாதுலருடன் புதுவைமாநகருக்குச் சென்று உலகநாத அடிகளின் சந்நிதானத்தைத் தலைப்பட்டனர்.

குளத்தில் தாமரையரும்புகள் அனந்தமிருப்பினும் காலை ஞாயி றின் கதிர் தீண்டியவுடன் மலரும் பருவத்தரும்பே மலர்ந்து மணந் தருதல் போல அதி தீவிரபக்குவியாய் இருவினையொப்பு மலபரிபாக மெய்தி நாலாஞ்சத்தினிபாதம் உடையராயிருந்த இராமைய அடிகள், உலகநாத சுவாமிகளின் சந்நிதானத்தைத் தலைப்பட்ட அந்நிமிடமே சட்சுதீக்ஷையென்னுந் திருவருட்பார்வையிற் றிளைக்கப்பெற்றவராய், உண்மை ஞானமலர்ந்து, சிவமணங்கமழ்தரத் தம்மைக்கண்டிலர். எங் குஞ் சிவசொரூபமாகத் தோற்றக்கண்டார். உடனே கீழ்விழுந்து பணிந்தனர், புரண்டனர், எழுந்தனர், ஆனந்தக் கூத்தாடினர், பாடினர், இவ்வாறு முன்னிலை முற்றுமாறி பாலர் உன்மத்தர் பேயர் போலாயினர்.

இதையறிந்த பங்காருதாசரியார் யாண்டும்போல் உலகநாத அடிகளை வணங்கி வெளிப்போந்து மருகனாராகிய இராமைய அடி களின் உண்மைநிலையை யறியாதவராய்ப் பித்துற்றாரெனவெண்ணி, தன்னுடன் சாக்கிரதையாக அழைத்துக்கொண்டு வந்து இல்லத்தி லெய்திய பின்னர் பித்தசாந்திக்குரிய வைத்தியங்களைச் செய்வாராயி னர். என்னேயிவர் செய்கை?

## இல்லறம் நீத்து வெளியேறுதல்.

இராமைய அடிகள் பகற்காலங்களில் கடியாபட்டி கடியாகண் வாய்க்கரை மேலுள்ள கொப்பிடாரியென்னும் காளிகோவிலிற் சென் றமர்ந்திருப்பதும், இரவில் வெளிப்போந்து அந்நகரின் ஈசான்ய திசையிலுள்ளதும் பங்காருதாசரிக்குச் சொந்தமானதும் ஆகிய கண்டியாரூருணிக் கீழ்க்கரையி லெழுந்தருளி யிருக்கும் பலர்கூடிச் சுமக்கும் பளுவுள்ளதாகிய கண்டியான் விநாயகரென்னும் கணேச மூர்த்தியைத் தாமொருவரே தூக்கி ஊருணியுள் வீழுமாறு வீசி யெறிவதும் வழக்கம். காலையில் பங்காருதாசரியார் வந்து விநாய கரைக் கரையிற்காணாமல் மயங்கி பின்னர் அறிந்து கரையேற்றிவைப் பர். இவ்வாறு மருகர் ஒவ்வொருநாளும் அதில் விநாயகரை ஊருணியுள் வீழ்த்துவதும் மாதுலர் காலையில் கரையேற்றிவைப் பதும் வழக்கமாயிற்று.

1118
ல 3324

இச்செயலால் பங்காருதாசரியார் தனது மருகராகிய இராமைய அடிகட்கு அறிவே சித்த சுவாதீனமில்லையென்று துணிந்து பைத்தியத்திற்கு வேண்டிய சிகிச்சைகளை யதிகமாகச்செய்ய ஆரம்பித்தனர். செய்யத்தகுதியற்ற இச்சிகிச்சைகளைச் செய்ததோடமையாது வெளியிற் செல்லாதிருக்க வேண்டியவற்றையுஞ் செய்தமைத்தனர்.

அடிகள் இந்நிர்ப்பந்த நிலையிலிருக்க, ஒரு நாள் தீபாவளிப் பண்டிகை வந்துற்றது. அன்று தேக்காட்டூரில் வசிக்கும் உயர்தனிகரும், சிவபத்தி யடியார்பத்திகளிற் சிறந்த சீலமுடையவரும் ஆகிய வீராணுதிராய முருகப்ப வேளாளர் என்பார் கடியாபட்டியிற் பங்காருதாசரியாரைக் காணவந்தனர். வந்த வேளாண்டலைவர் இராமைய அடிகளின் உண்மை நிலைமையையும், அவ்வுண்மை நிலையையறியாது தாசரியாரியற்றுந் தகாத செயலையுங்கண்டு, மனமாழ்கி, அடிகளைச் சிகிச்சை முதலிய நிர்ப்பந்த நிலையில் நின்றும் விடுவித்து, நீராடச் செய்து, கோடிபுனைந்து, உணவேற்றருளுமாறு உபசரித்து வேண்டினர். அடிகள் வேளாண்டலைவரின் பேரன்பிற் கிரங்கி, தீபாவளிக்குச் செய்தமைத்த சில இன்சுவைப் பலகாரங்களருந்தி, அன்றே அந்நகரை விடுத்து வெளியேறினர்.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவகுருமயம்.

# திருவிளையாட்டுப் படலம்.

இவ்வாறு வெளியேறிய மெஞ்ஞான மூர்த்தியாகிய இராமைய அடிகள் இருக்குமிடம் இன்னதென நியதியின்றி யதேச்சையாய்ச் சென்றும், அவசியமானாலன்றி யொருவருடனும் உரையாடாமலும், யாவரேயாயினும் விரும்பிக் கொடுத்தாலன்றி உணவு முதலியவற்றில் விருப்பமில்லாமலுந் திரிவாராயினர். ஓராண்டுவரை பங்காருதாசரி முதலாயினோர் யாங்கணுஞ்சென்று தேடியும் அடிகளிருக்குமிடத்தை யறிந்தார்களில்லை.

பங்காருதாசரியார் இராமைய அடிகளின் சகோதரராகிய சித்தாதி தாசரியாருக்குத் தனது இளைய குமாரியாகிய இலக்குமியைத் திருமணஞ் செய்துகொடுத்து வாழ்ந்திருந்தனர். சித்தாதிதாசரியார் பணஞ் செய்துகொண்டு மாமனில்லத்தே சின்னாள் வைகிப் பின்னர் மனைவியாகிய இலக்குமியம்மாளுடன் வைத்தியமுறையே தொழிலாகக் கொண்டு வேறுவைகி வாழ்ந்து வருவாராயினர். இல்லறத்தே வாழ்ந்து வருபவராயினும் தனது தமையனாராகிய இராமைய அடிகளைத் தேடிக்கொண்டும், உண்மை நிலையறிந்த உள்ளத்தராயும் ஒழுகினர். இஃதிங்ஙனமாக:

இராமைய அடிகள் ஆண்டு சிலசென்று சிவகங்கையென்னும் நகரத்திற்கு வந்து சேர்ந்தனர். அந்நகரில் வசிக்கும் மணவாள தாசர் என்னும் பெரியார் ஒருவர் ஒருதினம் அடிகளைக்கண்டு அடிவணங்கித் துதித்துத் தனது அந்தியகாலத்தின் நிலையினை யினைத்தென அறியவேண்டி 'மா பழுக்குமோ புளி பழுக்குமோ?' என வினவினர். அடிகள் புன்னகையினராய்த் தாசரைப்பார்த்து, அவர் அடங்குந் தினத்தையும் நேரத்தையுங் கூறி, அவர் அடையப்போகும் நிலையினைப்பற்றி 'புளிதான் பழுக்கும்' என அறிவித்தனர். அடிகளின் உத்தரவுப்படியே குறிப்பிட்டதினத்தில் மணவாள தாசர் சமாதியுற்றார் என்பர். அவர் அடைந்த நிலையில் அறிவித்த அடிகளேயன்றி யாவர் அறியவல்லவர்!

மற்றொருதினம் அந்நகரிலுள்ள கோமுட்டி வகுப்பைச்சேர்ந்த அளவு கடந்த அகந்தைகொண்டவராகிய தேவேந்திரன் செட்டியென்னுஞ் சுவாமியார் அங்குவரும் அடியார்களை அவமதித்துப் பரீக்ஷித்துவருந் தனது வழக்கம்போல் அடிகளையும் பரீக்ஷிக்க நினைத்து பெரிய குறடு ஒன்றை யெடுத்து நெருப்பிற் காயவைத்துப் புறத்தேபோந்து அடிகளைப்பார்த்து, 'நீ எக்ஷணி மந்திரசித்தி சோதிடம் ஆரூடம் இவைகளொன்றில் வல்லவனா? அல்லது உலகினரை வஞ்சித்து வயிறுவளர்க்க இவ்வாறு வேடங்கொண்டு திரிகின்றனையா? அல்லது உண்மைத் துறவியா? உள்ளதைக்கூறு. அல்லவேல் இதோ நெருப்பிற்பழுக்கக் காய்ந்திருக்கும் இரும்புக் குறட்டினாற் சுடுவேன்' என்று கேட்டனர். அடிகள் ஒன்றும் உரையாடாது புன்முறுவல்

கொண்டமர்ந்திருக்கச் சுவாமியார்சென்று நெருப்பிற் காயவைத் திருக்கும் குறட்டை அடிப்பக்கத்தைப் பிடித்துத் தூக்கினர். தூக்கிய சுவாமியார்கையிற் சூடுதாக்கிக் குறட்டை யெடுக்கமுடியாமல் தாக்குத்துண்டைச் சுற்றிக்கொண்டெடுத்தனர். எடுத்தும் முன்னை யைவிடச் சூடு அதிகமாயும், குறடு தூக்கமுடியாத பளுவாகவும் இருத்தலைக்கண்டு திகைப்புற்றுச் சந்தேகமெய்தி விழித்துக்கொண்டு நின்றனர்.

உடனே அடிகள் சாமியாரைப்பார்த்து பொடிக்காவலா வென்றும், குறடு குருடாகவும் முரடாகவும் போயிற்றோ வென்றும், புகைசாப்பிடவேண்டும் குறட்டுத்தீயைக் கொண்டுவாரும் என்றும் இவ்வாறு கூற, கோமுட்டிச் சுவாமியார் அஞ்சி, 'இவர் உண்மையில் ஞான மூர்த்தியே இதற்கையமில்லை'யெனத் தணிந்து திருவடிகளில் விழுந்து வணங்கி, 'அடியேனிழைத்த குற்றத்தைப் பொறுத்தருளி யாட்கொள்ளவேண்டும்' எனத் துதித்தனர். அடிகள் அதற்கு விடை கூறாது எழுந்து சென்றருளினர்.

இராமைய அடிகள் இவ்வாறு சிவகங்கையிலும் அதையடுத்த மானாமதுரை யென்னும் வானரவீர மதுரையிலுமாக எழுந்தருளி ஆடலியற்றிவருங்கால், மானாமதுரைக்குத் தென்புறம் பத்துக்கடிகை தூரத்தேயுள்ள புத்தூர் என்னுங் கிராமத்தில் அதிதீவிர பக்குவியாயிருந்த சிவானந்த சுவாமிகள் என்னும் பெரியருக்கு உபதேசித்துப் பிராணாயாமம் சித்தியாகுமா றருளி யாட்கொண்டனர். அடிகள்பால் ஞானோபதேசம்பெற்ற சிவானந்தவள்ளல் தனது ஞானாசிரியர்மேற் பாடப்பெற்ற செந்தமிழ்ப் பிரபந்தங்கள் சில இஞ்ஞான்றும் உள்ளன.

இராமைய அடிகள் மானாமதுரை முதலிய இடங்களில் இராக் காலத்தில் நூற்றுக் கணக்கான தீவர்த்திகள் புடை சூழப் பல்லக்கிலேறி மனித சஞ்சாரமில்லாத இடங்களிற் சென்றுலாவுவ துண்டு. அளவின்றி யொளிருந் தீவர்த்திகளின் பிரகாசத்தைக் கண்டு அணுகிப் பார்க்கின் அடிகள் ஒருவரே தனித்து வருவர். இதைப் போன்ற அற்புதச் செயல்கள் அளவின்றி யுள்ளன.

அநேகர்க்கு இஷ்ட காமியங்களை யுதவியும், பின்னால் நிகழப் போகும் நிகழ்ச்சிகளை முன்னரே யறிவித்தும், பெருநோய் குன்மம்

முதலிய பிணிகளை நீக்கி யருளியும், விஷவேகத்தை யகற்றியும், பூமியி னுட் புதைபட்டுக் கிடக்கும் பொருள்களைக் காட்டி யெடுப்பித்தும், மந்திர சித்தியில் வல்லோரா லியற்றிய பில்லி சூனியங்களைப் பெயர்த்து வீசியும், அன்பர்கட்குற்ற அல்லல் களைந்தும் இவ்வாறு அடிகளியற் றிய சிறு விளையாடல்கள் அனந்தம் உள்ளன. அவற்றை விரிவஞ்சி விடுத்தாம்.

இவ்வாறு பல ஆண்டுகள் செல்ல, இராமைய அடிகள் சிவகங்கை மானாமதுரை முதலிய நகரங்களை விடுத்து, பரம்பக்குடி எமனேஸ் வரம் முதலிய வூர்களிற் சென்று வதிந்தருள்வாராயினர்.

பரம்பக்குடியை யடுத்த எமனேஸ்வரத்தில் ஓர்நாட் காலையில் அடிகள் வீதியின் வழியாய்ச் சென்றுகொண்டிருக்குஞ் சமையம் இடது காலில் நல்ல பாம்பொன்று கடித்து கடிவாயில் நின்றும் தனது வாயை யெடுக்க முடியாமல் இழுபட்டுக் கொண்டே வருவதை வீதியி லுள்ளார் கண்டு விம்மிதமுற் றஞ்சி 'என்னே யிஃ'தெனப் பதைப் புடன் கேட்க, அதற்கு நகைமுகத்துடன் 'நமது சகோதரன் காலைப் பற்றிக் கொண்டு கூடவே வருகின்றான்' எனக் கூறியருள, கேட்டவர் கள் உடனே பாம்பைக் கடிவாயில் நின்றும் இழுத்து வீசியெறிந்தனர்.

இராமைய அடிகள் ஓயாது கண்ணிமைத்துக்கொண்டே யிருப் பது வழக்கமாகலின் அது காரணமாக அந்நகரிலுள்ளார் அனைவரும் அடிகளைச் சிமிட்டுக்கண்சாமி யென்றழைப்பது வழக்கமாயிற்று.

இவ்வாறு சின்னாட்செல்ல, பரம்பக் குடியை யடுத்த எமனேஸ் வரத்திலுள்ள வைகை நதியின் கீழ்த்திசையில் ஒரு கடிகை தூரத் தில் காக்காத் தோப்பென்னும் பெயருள்ள மயானத்தில் இடிந்த சிறு மண்டபம் ஒன்றுள்ளது, அம்மண்டபத்திலிருந்து ஒவ்வொரு நாளும் இராக் காலத்தில் விண்ணளாவிய பேரொளி யொன்று தோன்றிப் பிர காசிக்கும். இக்காட்சி யென்றுமுள்ளதன்று. இடையிற் சிலநாள் இரா மைய அடிகள் அம் மயானப் பாழ்மண்டபத்தில் இராக் காலங்களில் எழுந்தருளி யிருந்தனர். அதனை லேற்பட்ட வொளியேயாம், அவ் வொளி அடிகளின் அருள் ஞான வொளியோ? யோகத்தால் அகத்தே தோன்றிப் புறத்தேயும் பொங்கிப் பரவிய வொளியோ? திருமேனி யின் ஒளியோ? யாதோ அறியேம்,

என்றுமில்லாது இடையிற் சில நாளாக இரவிற் றோன்றும் இப் பிரகாசத்தைச் சிலர் கண்டு திகைப்புற்று அதிசயமும் அச்சமுங் கொண்டு ஊரிலுள்ளார் அனைவர்க்கும் உணர்த்தினர். மயான மண்டபத்தி லிருந்து ஆகாய மளாவிப் பிரகாசிக்கும் பேரொளிக்குக் காரணம் இன்னதென ஆராய்ந் தறியவேண்டி மந்திர சித்தியில் வல்ல மனோ திடமுள்ள பட்டுநூற்கார வகுப்பைச் சேர்ந்தவர்க ளாகிய நால்வர் துணிவுடன் இரவில் நள்ளிருள் யாமத்துப் புறங் காட்டை நோக்கிப் புறப்பட்டுச் சென்றனர். சென்ற நால்வரும் மயானத்தை யணுகுமுன் கட்புலனாகிய பேரொளி திடீரென மறைந்துவிட்டதைக்கண் டஞ்சி யுடனே மீண்டனர்.

இவ்வாறு சில தினங்கழிய ஒரு நாள் அந்நால்வருந் தற்காப்புந் திசைக் காப்புஞ் செய்துகொண்டவர்களாய்ப் புறப்பட்டு 'இன்று அவ் வொளியின் இரகசியத்தை யெவ்விதமுங் கண்டறிந்து வரவேண்டும்' என்ற எண்ணமுடையராய் வருகின்றனர். வருகின்றவர்கள் வழக்கம் போல் மயானத்தைத் தலைப்படுமுன் கட்புலனாகிய பேரொளி மறைந்தது. ஒளி மறைந்து போயிற் றென்பதை யறிந்தும் அஞ்சாதவர்களாய் மயானத்தைக் கூர்ந்து நோக்கிக் கொண்டே வருகின்றனர். வருகின்றவர்கள் இராமைய அடிகள் எதிர்வரக் கண்டனர். கண்ட அந் நால்வரும் 'இவர் நமது ஊரிற் றிரியுஞ் சிமிட்டுக்கண்சாமியாராயிற்றே! இங்குத் தோன்றிய பேரொளிக்குக் காரணம் இவரே யெனத் தோன்றுகின்றது. இவரைப் பார்க்கையில் ஒரு சித்தராகவே தோற்றப்படுகிறது. செல்லச் செல்லத் தெரிவோம்' என் றிவ்வாறு உரையாடிக் கொண்டு திரும்பி வைகையாற்றில் வந்து நின்றார்கள்.

இராமைய அடிகள் ஆற்றின் வழியே மேற்றிசையை நோக்கிச் சென்று வைகையாற்றின் ஒரு கடிகை தூரத்தேயுள்ள மிகப் பெரியதாகிய யமுனேஸ்வரங் கண்வாய்க் கலுங்குக் கரையிமேலேறி நிற்க, ஆற்றில் நின்றும் அடிகளைப் பின்றொடர்ந்து சென்ற நால்வரும் கலுங்குக் கரையி னருகேயுள்ள அடர்ந்து பரந்த பனங்குட்டித் தோப்பில்வந்து மறைந்து நின்றார்கள். கரையில் நின்ற அடிகள் திடீரெனமறைய, மறைந்து பார்த்துக்கொண்டு நின்ற நால்வரும் ஆச்சரிய மடைந்து கரையிமேலேறிப் பார்த்தனர். அக் கண்வாய்க் கரையை யடுத்த நிலங்

களில் வான் பயிராகிய புன்செய்ப் பயிர் விளைவதேயன்றிக் கண்வாயிற் றண்ணீர் பெருகி நன்செய்ப் பயிராகிய நெற்பயிர் எஞ்ஞான்றும் விளைவதில்லை. இத் தகுதி வாய்ந்த அந்நிலங்களில் அன்று நெற்பயிர் விளைந்தும் கண்வாய் நிறைபக் கூடல்போற் றண்ணீர் பெருகியும் விளங்குவதைக் கண்டு அளவிலா ஆச்சரிய முற்றவர்களாய் 'இஃதென்னை? என்றுமில்லாத இந்திர சாலமாக இருக்கின்றதே' யெனப் பிரமித்து நின்றனர்.

உடனே திடீரென வொரு மின்னல் தோன்றி மறைந்தது. அவ்வளவே அந்நால்வரும் மின்னலி னொளியாற் கண்தெரியாமற் கீழ் விழுந்து புரண்டு இரவு முற்றிலும் அவ்விடத்தே கிடந்து காலையிற் கண்தெரியப்பெற்றுக் கரையேறிப்பார்க்கையில் நிலங்களில் எஞ்ஞான்றும்போல் வான்பயிராகவும் கண்வாயிற் றண்ணீரில்லாம விருப்பதையுங்கண்டஞ்சி, 'சிமிட்டுக்கண் சாமியார் சிவஞானியோ? அல்லது திருவருட் சித்தரோ? அறியோம். இவர் பெருமை எம்மாலளவிட்டுரைக்கற்பாலதன்று. இதுவும் அவர் திருவிளையாடலே. இதற்கையமில்லை'யெனத் துணிந்தவர்களாய் நகரில்வந்து அடிகளின் பெருமையைத் தாங்கள் அறிந்தவரை யாவர்க்கும் உணர்த்தினர்.

பின்னொருதினம் பரம்பக்குடியில் முத்தாளம்மன் கோவிற்றெருவிலுள்ள அழகான்மிக்க தங்கம் என்னும் பெயர்கொண்ட தாசி சிலருடைய ஏவலினால் அந்திவேளையில் அவ்வழியே சென்றுகொண்டிருக்கும் அடிகளையழைத்துவந்து தனதில்லத்திருத்தி, எண்ணெய்க்காப் பணிந்து, வெந்நீரில் மூழ்குவித்து, உணவருத்தித் தானும் உண்டுகளித்துச் சுகந்தமணிந்து, கதவைப்பூட்டித் தாழிறுக்கிப் பஞ்சணைக் கழைத்துச்சென்று அதன்மே லெழுந்தருளச்செய்து தானும் அருகேயமர்ந்து அடிகளிடத்துக் காமவின்பம் நுகரக்கருதிக் கல்விக்குரிய இன்னுரையாடினள்.

அவ்வேளையில் அடிகள் 'கொல்லன் உலையிற் கொசுகுக்கு வேலையுண்டோ?' வெனக்கூறிப் புன்னகைபுரிந் தமர்ந்திருந்தனர். சிறிது நேரத்தில் அக் கணிகைமாது அளவின்றியுண்ட மதுமாமிஸ மயக்கத்தாற் றன்னைமறந்து துயில்கொண்டனள். காலையிற் கண்விழித்துப்

பார்க்கையில் அடிகளை யங்குக்காணவில்லை. கதவுபூட்டித் தாழிறுக் கிப்படியே யிருந்தது. இக்காட்சியைக்கண்டு ஆச்சரிய மடைந்தாள். தனக்கு நீரிறங்கமுடியாமல் நீர்த்துவாரம் அடைபட்டு வயிறுபருத்து மயங்கி வருந்தியலறினள். 'இஃது சிமிட்டுக்கண் சுவாமியாராகிய திருவருட் சித்தருடைய பெருமையை யறியாம லிழைத்த தீச்செய லின் பயனே' யெனவுணர்ந்து வெளிப்போந்து, தனக்கு வேண்டுவார் சிலரிடத்து நடந்தவற்றைக்கூறி, உடனழைத்துக்கொண்டு அடிகளைத் தேடிச் சென்றனள். யாண்டுங்கண்டிலள். முடிவில் காக்காத்தோப்பில் மயானமண்டபத்தி லிருப்பதாய்க் கேள்வியுற்று ஆண்டுச்சென்று அடிகளின் திருவடிகளில் தனது முடியுறப்பணிந்து கண்ணீராட்டிக் கதறினள். 'அடியாள் அறியாம லியற்றிய அபசாரத்தின் பயனை யனுபவிக்க இயலாது வருந்துகின்றேன். இனி அடிகள் திருவுள மிரங்கி யருள்புரிந் தாட்கொள்ளவேண்டு'மெனத் துதித்தனள். அடி கள் புன்னகையினராய்த் திருவருட்பார்வை சாத்தியருள, உடனே யக்கணிகைமாது நோய்நீங்கி யடிவணங்கி விடைகொண்டு சென்றாள்.

இவ்வாறு சின்னாட் சென்றபின்னர் ஒருதினம் பரம்பக்குடியில் புலவர் நாகலிங்கம்பிள்ளை யென்பார் புரட்டாசி மாதத்தில் குடும்பத் துடன் திருப்பதி யாத்திரைக்குச் செல்பவர் இராமைய அடிகளையும் வண்டியி லேற்றிக்கொண்டு தன்னுடன் அழைத்துச் சென்றனர். சென்றபுலவர் யாத்திரைமுடித்து அடுத்த மதியாகிய ஐப்பசி மாதத் தில் அடிகளுடன் பரமக்குடியாகிய தனது நகரத்திற்கு வந்துசேர்ந் தனர். அடிகள் புரட்டாசித்திங்கள் நான்காஞ் சனிவாரத்தன்று பரமக்குடியில் பசனைமடத்தில் இருந்தனர் எனக் கூறக்கேட்டு நாக லிங்கம்பிள்ளையென்பார் வியப்படைந்து அடிகளைத் தான் அழைத்துச் சென்றதுமுதல் யாத்திரை முடிந்து ஊருக்கு வந்துசேரும்வரை அடிகள் தன்னைவிட்டு நீங்காமலிருந்ததைக்கூற யாவரும் அற்புத மெய்தி அடிகளின் திருவடிகளிற் பணிந்தனர்.

பரம்பக்குடியில் ஒரு மாது தனது கொல்லைகளிலுள்ள மிளகாய்ச் செடிகள் யாவும் புழுவினால் அரிக்கப்பெற்றுக் காய்ப்பின்றி யிருத்தலை அடிகட்கு விண்ணப்பித்து வேண்டிக்கொண்டனள். அடிகள் புன் னகை முகத்துடன் 'மிளகாய் நன்றாய்க் காய்க்கும்' எனத் திருவாய்

மலர்ந்தருள அன்று முதல் செடிகளிற் புழுவின்றித் தழைத்து நிறை யக் காய்த்துப் பழுத்தன. அக் காட்சியைக்கண் டகமகிழ்ந்த அம்மாது அடிகள்பாற் பேரன்புடையளாய் ஒரு கடகம் மிளகாய்ப் பழங்களைக் கொண்டுவந்து அடிகள்முன் குவித்து நின்று துதித்து வணங்கினள். அடிகள் அந் நிமிடமே அவ்வளவு மிளகாய்ப் பழங்களையும் உண் டருளிப் புன்னகைபுரிந் தமர்ந்தருளினர். அதுமுதல் இராமைய அடிகளை மிளகாய்ச் சுவாமியென் றழைப்பது வழக்கமாயிற்று.

இவ்வாறு அடிகள் பரம்பக்குடியி லமர்ந்தியற்றிய அற்புத ஆடல் கள் அனந்தமாகும். அடிகள் தம்மை யாவர் அழைப்பினும் சிறு குழந் தையைப்போல் அவர்களுடன் செல்வது வழக்கம். சில வேளைகளில் தம்மை யழைப்பவர்களுடன் செல்லாமல் ஒரு வேளையாய்ப் போவோம் எனக்கூறி நேராகச் சென்றுவிடுதலும் உண்டு.

ஒரு தினம் பரம்பக்குடி யாற்றில் கடல் பொங்கியதெனக் கண் டார் வியப்புற வெள்ளம் உண்டாகித் தோணி படகு முதலியனவும் செல்ல வியலாதவாறு கரைதெரியாமற் பெருகியது. அன்று அடிகள் எமனேஸ்வரஞ் செல்லவேண்டி அவ்வாற்றி லிறங்கி ஆழமிவ்வள வென் றறிய முடியாத அவ்வெள்ளத்தில் நடந்து சென்று கரையேறி எமனேஸ்வரஞ் சென்றருளினர்.

இவை முதலிய திருவிளையாடல்களைக் கண்டு எமனேஸ்வரத் திலும் பரம்பக்குடியிலு முள்ளவர்கள் அடிகளை எந்த நேரமுஞ் சூழ்ந்து வணங்க ஆரம்பித்தனர். அடிகட்கு அக்கூட்டம் மன அமை திக்குத் தடையாக விருந்தமையால் அந்நகரை விட்டு நீங்கித் தமது பெருமை யறியாத் துடுக்கராகிய துருக்கர்கள் நிறைந் துறையும் இளை யான்குடி யென்னும் நகரத்திற்கு வந்துசேர்ந்தனர்.

அடிகள் தம்மிடத்திற்கு வருபவர்களிடத்தில் 'மஞ்சிப் பொடிக் காவலா' என்று பொடி கேட்பது வழக்க மாகலின் இதைக் கண்ட சில துருக்கர்கள் மிளகாய் பாஷாணம் இவைகளைப் பொடியாக்கிக் கொண்டு சென்று கொடுப்பார்கள். அடிகள் அப் பொடியையும் வாங் கித் தமது நாசிக்கேற்றி வருத்தமின்றிப் புன்னகை கொண்டு வீற்றிருப்பர்.

ஒரு நாள் அடிகள் இளையான் குடியை யடுத்த ஒரு கடிகை தூரத்தேயுள்ள திருவெள்ளூருக்குச் செல்லுங்கால் இரண்டு துருக்கர்கள் வந்து வழிமறித்து அடிகளின் இரு கரங்களையும் பிடித்துக் கொண்டு 'வாரும் மிளகாய்ச் சுவாமியாரே' யென்று இழுத்து வருத்தினர். உடனே அடிகட்குக் கோபம் பெருகி 'அடா முரடரே!' என அதட்டிக் கைகளை உதறிப் பிடுங்கிக்கொண்டு வேகமாய்ச் சென்று திருவெள்ளூரை யடைந்து அங்குள்ள ஐயனார் கோவிலில் அமர்ந்திருந்தனர். அடிகட்கு இடக்கண் விளைத்த துருக்க ரிருவரும் கண் தெரியாமல் மயங்கிக் கீழே விழுந்துகிடந்தனர்.

கண்ணிழந்த துருக்க ரிருவரையும் அழைத்துக் கொண்டு அவரின் உறவினர் அநேகர் திருவெள்ளூர் ஐயனார் கோவிலில் அடிகளிருக்கு மிடத்தை யணுகினர். இதைக் கேள்வியுற்றுத் திருவெள்ளூரில் உள்ள அன்பர்கள் பலர் வந்து கூடினர். துருக்கர்கள், கண்ணிழந்தா ரிருவரையும் இராமைய அடிகளின் திருவடிகளில் வீழச் செய்து, 'சுவாமிகளின் பெருமையை யறியாது இச்சிறுவர்களிழைத்த குற்றத்தை மன்னித்தருளிக் கண்தெரியும்படி செய்யவேண்டும், எனப்பணிந்து வேண்டினர். அடிகள் புன்னகை கொண்டு வீற்றிருந்து, சிறிது நேரத்தில் சந்தோஷம் சந்தோஷம் எனக் கூறியருள, உடனே கண்ணிழந்த இருவரும் கண் தெரியப் பெற்றனர். துருக்க ரனைவரும் களிப்படைந்து சர்க்கரை வாங்கி வந்து அடிகளின் சந்நிதானத்தே வைத்து நிவேதித்து யாவருக்கும் விநியோகித்துச் சென்றனர்.

அதன் பின்னர் அடிகள் இரண்டொரு தினஞ் சென்று அந்நகரை விட்டு நீங்கி ஓச்சந் தட்டு, வள்ளக்குளம், அறமணக்கரை முதலிய வூர்கட்குச் சென்று அவ்விடங்களிற் சின்னாள் இருந்து மீண்டும் இளையான் குடிக்கு வந்து அந்நகரை யடுத்த சாலை புதூர் என்னுஞ் சிற்றூர்களில் அமர்ந்தருள்வா ராயினர்.

இளையான் குடிக்கு அணித்தாகிய சாலையென்னுஞ் சிற்றூரிலுள்ள பனையோலையால் வேய்ந்த சாவடியின் சிறு அறையில் அடிகள் சென்று சயனித்திருப்பது வழக்கம். இதையறிந்த சில துருக்கர்கள் இரவில் வந்து சாவடியின் அறையில் அடிகள் சயனித்திருப்பதைக்

கண்டு அறையினுள் ஒரு மூட்டைக்கு மேலான மிளகாய்ப் பழங்களைக் கொண்டு வந்து நிறைத்து அம் மிளகாய்களில் தீயைக் கொளுத்தி அறைக் கதவை யுடைத்து வெளியே தாழிறுக்கி இலந்தைமுட் படலால் வெளிவாயிலை யடைத்துச் சாவடியிலும் தீயைப் பற்றவைத்துச் சென்றனர். சாவடி பனை யோலையால் வேயப்பெற்ற தாகலின் சிறிது நேரத்தில் சாவடி வெந்து கரிந்து பொரிந்து சாம்பராயிற்று. அடிகள் யாதொரு துன்பமும் இன்றி வெளிச்சென்று வீற்றிருந் தருளினர். மெஞ்ஞானிகளைக் கேவலம் இவ்வக்கினி யென் செயவல்லது! எதிர்ப் படினுந் தலை வணங்கி அஞ்சி யகலுமன்றோ? இவ் வுண்மையை அறிவிலிகளாகிய மிலேச்சர்கள் யாங்ஙனம் உணர்வர்?

அடிகள் அமர்ந்திருந்த அறையினுள் மிளகாய்களை நிறைத்துத் தீவைத்துச் சாவடியையுந் தீக்கிரையாக்கிய சண்டாளர்களாகிய மிலேச்சர்களை அந்நிமிடமே தாங்கொணுக் கொடிய சுரநோய் பற்றித் தகிக்க ஆரம்பித்தது. சுர நோயின் வெப்பத்தைச் சகிக்க லாற்றாது தீயினுள் வீழ்ந்த புழுக்களைப் போற் றுடிதுடித்து வருந்தி யலறினர். உறவினர் யாவரும் வெப்பத்தால் அருகிற் செல்ல வியலாதவாறு தவித்தனர். திடீரென இச்சுர நோய் இவர்கட்கு எவ்வாறு உண்டாயிற்றென் றெண்ணிச் சுர நோயாற் றவிக்குங் கொடியோரைக் கேட்டு உண்மை யுணர்ந்து கொண்டவர்களாகித் தங்கள் பள்ளிவாசலிற் சென்று பாத்தியா வோதி வேண்டிய வைத்தியங்களை யெல்லாம் செய்தும் சுர நோய் மீண்டும் அதிகரிப்பதைக்கண் டஞ்சி, இது பெரியாருக் கிழைத்த பிழையின் பயனே. இதற் கையமிலையென எண்ணமுற்று அதிகாலையில் உறவினர்களாகிய ஆண் பெண் முதலிய அனைவரும் பெருங் கூட்டமாகச் சூழ்ந்து சுர நோயால் வருந்துந் துருக்கர்களை யுந் தூக்கிக் கொண்டு அடிகளிருக்கு மிடத்தையடைந்து திருவடிகளின் கீழ் அக்கொடியோர்களைக் கிடத்தி இச் சிறியோ ரிழைத்த பெருங் குற்றத்தையும் பொறுத்தருளிச் சுர நோயை நீக்கி யருள வேண்டும் என யாவரும் பணிந்து வேண்டினர். அடிகள் புன்னகை கொண் டமர்ந்திருக்கச் சிறிது நேரத்தில் தீங்கிழைத்த கொடியோர் சுரநோய் நீங்கப் பெற்றனர். உடனே துருக்கர்கள் யாவரும் மகிழ்ச்சி யுடைந்து எமது கண்மணி யனைய இராமைய அடிகளைத் தங்கள் மஸ்

தானகப் பாவித்துப் பள்ளிவாசலிற் கழைத்துச் சென்று ஆங்கு ஓர் உயர் ஆசனத்தி லெழுந்தருளுவித்து, பட்டாடைபுனைந்து மாலைக ளணிவித்து சர்க்கரை பழங்கள் இவைகளை நிறையக் கொண்டுவந்து அடிகளின் றிருமுன்னர்ப் பரப்பிப் பாத்தியாவோதிப் பணிந்து சென்றனர்.

இராமைய அடிகட்கு மிளகாய்ச் சுவாமிகள் எனத் திருநாமம் வழங்குதற்கு இச்சரிதத்தையும் ஒரு காரணமாகக் கூறுவர்.

அதுமுதல் இளையான்குடித் துருக்கர்கள் அனைவரும் அஞ்சிப் பணிந்து செல்வதேயன்றி, தங்கள் சாதிக்குரிய துடுக்கான செயல்க ளொன்றுஞ் செய்வதில்லை. இவ்வாறு சின்னுட்செல்ல பின்னர் அடிகள் இளையான்குடியை விடுத்துத் தாயமங்கை, மங்கலநாடு முதலிய இடங்கட்குச் சென்றருளினர்.

இராமைய அடிகள் தனித்துச்செல்லுஞ் சமயங்களில் சிலருடன் கூடி வார்த்தையாடிக்கொண்டு வருதல்போன்ற நிகழ்ச்சிகள் முன்னால் செல்பவர்கட்குத் தோன்றுதலுண்டு. அவர்கள் திரும்பிப் பார்ப் பார்களாயின் அடிகள் ஒருவரே தனித்து மௌனமாய் வந்துகொண் டிருப்பர். துஷ்ட மிருகங்களும் அடிகளைக்கண்டால் பணிந்து மன அமைதியுடன் நீங்கிவிடும். இவைபோன்ற அற்புதச்செயல்கள் அனந் தம் உள்ளன.

ஒருதினம் தாயமங்கையையடுத்த கீளியேந்தலென்னும் கிரா மத்தில் ஒரு வைணவ அந்தணர் தனது இல்லத்தின் றிண்ணையில் அமர்ந்து வடமொழிப் பாகவதச் சுவடியொன்றை வைத்து வாசித்துக் கொண்டிருக்கையில், அச்சுவடியில் ஐயங்கார்படிக்கு மேட்டிவுள்ள இரண்டு சுலோகங்களைக் கரையான் தின்றுவிட்டமையால் அக்கரந் தோன்றுமல் மயங்கினர். அவ்வமயம் அவ் வில்லத்தின்வழியே சென்றுகொண்டிருக்கும் இராமைய அடிகள் கரையானுற் றின்னப் பட்ட சுலோகங்க ளிரண்டையுங்கூறி அவ் வில்லத்தின் றிண்ணையி லமர்ந்தருள, ஐயங்கார்கண்டு வியந்து எழுந்து பணிந்து, 'சுவாமி களின் பெருமையை யிதுவரை யறிந்திலேன். அதனுல் மதியாதிருந்த குற்றத்தை மன்னித்தருளவேண்டும்' என வேண்டினர். ஒருவர்

இகழும் இகழ்ச்சியையும் புகழும் புகழ்ச்சியையும் ஒன்றெனக்கொண்ட உத்தம ஞானியாகிய அடிகள் புன்முறுவலுடன் சிறிது நேரம் அத் திண்ணையில் அமர்ந்திருந்து எழுந்து சென்றருளினர்.

ஞானானந்த மூர்த்தியாகிய இராமைய அடிகள் மங்கலநாடு முதலிய நகரங்களைவிடுத்து, சர்வசித்து வருடம் சித்திரை மாதம் பூமனகரமாகிய இக் கடம்பாரண்ய க்ஷேத்திரத்தை யடுத்த பேரணிப் பட்டிக்கு வந்து சேர்ந்தனர்.

அடிகள் பேரணிப் பட்டிக்கு வந்துகொண்டிருக்குங்கால் வழி யில் காளையார் கோவிலுக்கு அருகிலுள்ள புலிக் கண்வாய் யென்னும் சிற்றூரில் வாழ்ந்து வருபவர்கள் அநேக ஆண்டுகளாய் மழையின்றி வாடுதலைக் கண்டு அதுவரை பெய்ய வேண்டிய மழை யவ்வளவையும் அன்றே பெய்யுமா றருளி, அச் சிற்றூரில் உள்ளார்க்கு அனுக்கி ரகித்து மீண்டு பேரணிப் பட்டிக்கு வந்து சேர்ந்தனர்.

அஞ்ஞான்று அடிகட்கு வயது சுமார் (எ௰௫) எழுபத்தைந் திருக்கலாம். பேரணிப் பட்டிக்கு வந்து சேர்ந்து அந் நகரிலுள்ள பனை யோலையாற் சமைத்த மேலை மடாலயத்திலும், அதற் கருகிலுள்ள சமாதி யாலயத்தும், கீழ்த் திசையில் விநாயகர் ஆலயத்திலும், மாந் தோப்பிலும், இல்லங்களின் வெளித் திண்ணைகளிலும் ஆக அமர்ந் திருந்தனர்.

இடை யிடையே பூமனகரத்திற்கு எழுந்தருளிவருவது வழக் கம். அவ்வாறு வரும்பொழுது அங்குள்ளவர்கள் சுவாமிகள் எவ் விடத்திற் கெழுந் தருளுகின்றதெனக் கேட்பின் தங்கச்சி வீட்டுக்குச் செல்கின்றேன் என்றும் நெல்லிவள நாட்டிற்குப் போகின்றேன் என் றும் இவ்வாறுகூறி இப் பூமனகரத்திற்கு வந்து இங்குள்ள இராம தீர்த்தமாகிய ஊருணியின் மேல்கரையிலுள்ள விநாயகர் ஆலயத்தி னுள்ளும், ஷெ தீர்த்தத்தின் தென் கரையிலுள்ள இலுப்பைத் தோப் பில் இலுப்பை மரத்தடியினும், மேலை மடாலயத்தினும், ஆதிமூல சுவாமிகள் மடாலயத்தினுள்ளும் ஊருக்குள் சில இல்லங்களின் ஒட் டுத் திண்ணைகளினும் இவ்வாறு பல இடங்களினுமாக வீற்றிருந் தருளுவர்.

இவ்வாறு அடிகள் பேரணிப் பட்டியினும் பூமனகரத்தினும் ஆக எழுந்தருளி யிருந்தியற்றிய அற்புத ஆடல்கள் அனந்தமாகும். அவைகளை இவ்வளவென வரையறுத்துக் கூற வியலாதென அஞ்சி விடுத்தாம். அடிகள் இப் பூமனகரத்தில் இராம தீர்த்தத் தென் கரையில் தாம் சமாதிகொண் டெழுந்தருளப் போகும் இடத்தில் எழுந்தருளி யிருந்துகொண்டு தம்மைக் குளத்தங்கரை யிராமன் என்றும், பச்சரிசியி ராமன் என்றும், இலுப்பைப்பழந் தின்னலும் என்றும் இவ்வாறு தமது பிற்காலத்திய நிலையினை அன்பர்கட்கு அறிவுறுத்தி யருளுவர்.

இராமைய அடிகள் பேரணிப் பட்டிக் கெழுந்தருளிய அவ் வருஷ முதல் சித்திரைத் திங்கள் நான்காம் பானுவாரத்தன்று அந் நகரில் உள்ளாரும் இன்னுஞ் சில அன்பர்களுமாக ஆலோசித்துக் குருபூசையியற்ற முயன்றனர். குருபூசைக்கு நம்மால் நியமித்த தினம் அடிகட்கு மேற்றதோ வென விண்ணப்பித் தறிய வேண்டுமென எண்ண முற்றனர். உடனே அடிகள் அங்குத் தோன்றி நமது மாதம் முதல் மாதமும், வாரம் முதல் வாரமுமே யாகும் எனத் திருவாய் மலர்ந்தருளக் கேட்ட அன்பர்கள் யாவருந் தாங்கள் நியமித்த தினத்தையே குறிப்பிட்டு உத்தர வளித்தமைக்கு மகிழ்வுற்று குரு பூசா மகோத்ஸவத்தைப் பசனைக் கோஷ்டிகளுடன் சிறப்புற நடாத்தி அவ்வாறே ஆண்டுகள் தோறும் சித்திரை மதியில் கடைசி ஞாயிற்றுக் கிழமைகளில் தவறாதபடி அடிகட்கு அபிஷேக அலங்கா ராதிக ளுடனும் பசனைகளுடனும் குருபூசா மகோத்ஸவத்தை அன்புட னியற்றி அன்று ஆயிரக் கணக்கான அடியார்கட்கும் அன்ன மளித்து வந்தனர்.

அடிகள் ஒரு தினம் இப் பூமனகரத்தின் மேல மடாலயத்தில் எழுந்தருளி யிருக்கும் பொழுது திடீரெனக் குடியிருந்த கோவில் இடிந்து விட்டது, மாயமாய்ச் சென்று வரவேண்டும் எனக் கூறி ஐந்து நாழிகை வரை பிராணவாயு வியக்க மின்றி அசைவற் றிருந் தனர். அதற்கு மேல் பிராண வாயு வியக்கமும், திருமேனி யசைவும் உண்டாயிற்று. கடியா பட்டியிற் றமது மாதுல ரில்லத்தே வைகி யிருந்த மாதாவாகிய பொன்னம்மாள் பூத வுடலினின்றும் நீங்கிச்

செல்கின்றாள் என்பதை யறிந்து தமதுடலை மீண்டுக் கிடத்திச் சென்று அன்னையைக் கண்டு தரிசித்துப் பரமபதத்திற் கனுப்பி விட்டுத் திரும்பி வந்து கூட்டிற் பிரவேசித்தனர் எனப் பின்னாற் றெரிய வந்தது.

அடிகளின் மனைவியா ராகிய வேங்கட சுப்பம்மாள் அநேக நாள் வரையிற் பிறந்த அகத்தி லிருந்துகொண்டு அடிகளின் வரவை யெதிர் பார்த்தும் வாராமையால் தனது பிதாவுடன் உவப்புடன் நிலைத்து மரிக்கின் உம்பர் வீடளிக்கும் உயர் பெரும் பதியாங் காசிநகர்க் கேகிச் சின்னாளங்கு வைகித் தேக வியோக மெய்தினர்.

இவ்வாறு சின்னாட்செல்ல, நாட்டரசன் கோட்டையிலுள்ள தனவணிகர் குலத்திற்றோன்றிய மெய்யப்ப செட்டியார் என்பவர் ஒரு தினம் இப் பூமனகரத்தில் வந்து இராமைய அடிகளை அன்புடன் வணங்கி நின்றனர். உடனே அடிகள் எச்சிலைக்காறி அவர் முகத்தில் உமிழ்ந்தருளினர். அவ் விசேடத்தால் அவ்வணிகர் துறவியாகிக் கோவிலூர் ஆதீனம் வேதாந்த மடாலயத்திற்குச் சென்று வேதாந்த நூல்களை ஆசாரியர் முன்னிலையில், ஐயந்திரிபு அற ஓதியுணர்ந்து சோழவள நாட்டி லுள்ள சிக்கல் என்னுந் திவ்விய தலத்திற் கணித்தா யுள்ளதும் கோவிலூர் ஆதீனத்திற்கு ஆதி குரு பீடமாகியதும் ஆன பொருள் வைத்த சேரி வேதாந்த மடாதிபதியாய் மெய்யப்ப ஞான தேசிகர் என விளங்குகின்றனர்.

மற்றொரு தினம் அடிகள் இப் பூமனகரத்தின் இராம தீர்த்தம் மேல் கரையில் உள்ள விநாயகர் ஆலயத்தி னின்றும் மேலை மடாலயத்திற்குச் செல்லவேண்டி அம்மடாலயத்தின் அருகே அஞ்ஞான்று போடப் பெற்றிருந்த குறவர் குடிசைகளின் வழியாகச் சென்றருளினர். அச்சமயம் இராமன் என்னும் பெயருடைய குறவன் மனைவி காத்தியென்பாள் சின்னம்மாள் என்னும் பெயருடைய தனது சிறிய பெண் குழந்தையைக் குடிசை வாயிலிற் பழந் துணி யொன்றை விரித்து அதன்மேற் கிடத்தி வெளியிற் சென்றிருந்தனள். அவ் வழி யாக வரும் அடிகள் அக்குழந்தையைத் தமதிரு கைகளானும் வாரி யெடுத்து மார்புற அணைத்து முகத்தினும் வாயினும் முத்தமீந்து மறு படியுங் கீழே கிடத்திச் சென்றருளினர்.

அடிகளின் பரிச விசேடத்தால் அக்குழந்தை யாகிய சின்னம்மாள் வளர்ந்து பருவமெய்திய பின்னர் மணஞ் செய்யப் பெற்றும் சிற்றின்பானுபவ மின்றித் துறவியாகிச் சென்று ஒரு சைவ மூதாட்டியினிடத்து உபதேசம் பெற்று பட்ட மங்கையில் ஆனந்தம்மாள் என்ற பெயருடன் பெரிய மடாலயம் ஒன் றமைத்துக் கொண்டு அதில் அடியர் பலர் புடைசூழ அமர்ந்திருக்கின்றனள்.

இவ்வாறு இராமைய அடிகள் அளவிறந்த திருவருட் செயல்களுடன் பூம னகரத்திலும் பேரணிப் பட்டியிலுமாக ஆறாண்டுகள் வரை யமர்ந்தருளினர். ஏழாவதாண்டாகிய விஜயவருடம் பிறந்தது.

திருச்சிற்றம்பலம்.

---

உ

சிவகுகமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தி பெற்ற படலம்.

சென்ற ஆறாண்டுகளாக பேரணிப் பட்டியில் உள்ள அன்பர்கள் வருடந்தோறும் முதல் மதியாகிய சித்திரையினிறுதியில் வரும் பானுவாரத்தில் அடிகட்குக் குருபூசா மகோத்ஸவத்தைச் சிறப்புற நடாத்தி வந்தனர். ஏழாவதாண்டு பிறந்தவுடன் சித்திரை மதியில் மூன்றும் பானுவாரத்தில் பூம னகரத்திலுள்ளார் புதிதாய் அடிகட்குக் குருபூசை யியற்ற வெண்ணி அதற்கு வேண்டுவன யாவுஞ் சிறப்புற அமைத்துப் பேரணிப் பட்டியிற்சென்று அடிகளையழைத்தனர்.

பேரணிப்பட்டியில் வழக்கமாய் நான்காம் பானுவாரத்தில் செய்துவருங் குருபூசையை இவர்கள் மூன்றும் பானுவாரத்தில் மாற்றிச்செய்ய ஆரம்பித்தமையானும், அடுத்துவரும் நான்காம் பானுவாரமாகிய ஞாயிற்றுக்கிழமையில் தாம் பூமனகரத்தில் திருவருள் நிலையாகிய விதேக முத்தியையடைந்து சமாதிகொண் டெழுந்தருளத் திருவுளத்திற் குறிப்பிட்டிருக்கின்றமையானும் அவ்வா றெழுந்தருளியபின்னர் குருபூசா மகோத்ஸவத்தை யிங்கிலுள்ளவர்களே எஞ்

ஞான்றுஞ் செய் தின்புறப் பெறுபவர்களாகையானும், இவைகளை யெல்லாம் அடிகள் திருவுளத்திற் கொண்டருளி இவர்கள் அழைத்த மைக்கு அடிகள் நமது குருபூசை பெரிய குருபூசை யென்றும், மலையாளங் குருபூசை யென்றும், ஞாயிற்றுக்கிழமை போவோம் என்றும், பூங்குடிக்கு ஒரே வேளையாய்ப் போவோம் என்றும் இவ்வாறு கூறி, தாம் இருந்த இடத்தைவிட்டு உச்சிப்பொழுது முதல் இரவு பத்து நாழிகை வரை எழாதிருந்தனர். பூங்குடியார் அடிகள் தங்களுடன் வருவதாகத் தோன்றாமையால், மனம்வருந்தித் திரும்பிவந்தனர். அந்த வாரத்தில் அவர்கள் குறிப்பிட்டபடிக்குக் குருபூசை நடைபெற வில்லை. அன்று இரவே அடிகள் யாரும் அறியாமற் பூமனகரத்திற் கெழுந்தருளி இராம தீர்த்தமாகிய ஊருணியின் தென்கரையில் தாம் அடங்கியருளப் போகுமிடத்தே வந்து கண் திறவாமலும், வாய்திறந் துரையாடாமலும், இருந்த இடத்தைவிட் டெழாமலும், வாயில் உணவையூட்டினும் உண்ணாமலும் சுகாசனத்தில் எழுந்தருளி யிருந் தனர்.

இவ்வாறு நான்குநாட்கள் செல்ல ஐந்தாவது தினத்தில் சண்ட மாருதம் ஆகிய பெருங் காற்றும் பெரு மழையும் உண்டாயின. அதற் கும் அடிகள் தாம் அமர்ந்தருளிய இடத்தை விட்டு எழா திருப்பதைக் கண்ட பூமனகரத்தேயுள்ள அன்பர்கள் அஞ்சி அடிகளிருக்கு மிடத் தில் பெரிய காவணத்தைச் சூழ அமைத்தும் 'சுற்றிலுந் திரைச்சீலை கட்டியும், மெத்தை திண்டு தலையணைகள் முதலியவற்றைக் கொண்டு வந்து விரித்தும் உபசரித்தனர். அவற்றை அடிகள் அங்கீகரித்து ஏற் றுக் கொள்ளவில்லை. அதற்கடுத்த நாள் முதல் அடிகளைத் தரிசிப்ப தற்கு அயல் நகரங்களினின்றும் சனத் திரள்கள் வந்து நிறைந்தன. இவ்வாறு வந்து குழுமிய சனத் திரள்கள் அடிகளைச் சூழ்ந்து நெருக் காதிருக்க வேண்டி நான்கு பக்கங்களினும் கயிறு கட்டிக் காவல் நிய மித்து அடிகளைத் தரிசிக்க வந்தவர்கட்கெல்லாம் இப் பூமனகரத்தி லுள்ளார் தங்கள் தங்கள் இல்லங்களினும் சிவாலயத்திலும் மடாலயங் களினும் இலுப்பைத் தோப்பினும் யாங்கணும் உணவளித் துபசரித் தனர். தரிசிக்க வருவோர்கட்கும் உணவு முதலிய வசதிகள் அமைத்து வைத்திருந்தனர்.

அடுத்த பானுவாரமாகிய ஞாயிற்றுக் கிழமையில் இராமைய அடிகள் ஒரு வாரமாக வுணவு உறக்கம் உரையாடுதல் ஆகிய இவைகளின்றி ஓரே இடத்தில் யோக நிட்டையில் அமர்ந்திருக்கின்றனரெனக் கேள்வி யுற்றுத் தரிசிப்பதற் காகவும் வழக்கமாக வருடந்தோறும் நடைபெறும் குருபூசா தினமும் அன்றே யாகலான் அதைக் குறிப்பிட்டும் சிவகங்கை, மானாமதுரை, பரம்பக்குடி, எமனேஸ்வரம், இளையான்குடி, தாயமங்கை, மங்கலநாடு, கடியாபட்டி, பேரணிப்பட்டி முதலிய நகரங்களிலிருந்து சனத்திரள்கள் ஆயிரக் கணக்காக வந்து கூடின.

இதற் கொருவாரத்திற்கு முன்னர் புதுக் கோட்டையிற் றிருவருட் சமாதிகொண் டெழுந்தருளி யிருக்கும் உலகநாத சுவாமிகட்குப் பாற்காவடி கொண்டு சென்று அபிஷேகித்து வரும்படி அடிகளால் அனுப்பப் பெற்றவர்களாகிய அன்பர்கள் நால்வரும் அவ்வாறே சென்று அபிஷேகித்து அன்று வந்து சேர்ந்தனர்.

இவ்வாறு யாவருங் கூடிச் சூழ்ந்து நிறைந்து நிற்க அன்று பகல் (௰௫) பதினைந்து நாழிகையளவில் எமது சற்குரு நாதராகிய இராமைய அடிகள் இராம தீர்த்தமாகிய ஊருணியின் தென்கரையில் வடக்கு முகமாகப் பத்மாசனத்தில் அசைவற்றமர்ந் தருளியபடியே அகண்டாகார நித்தவ்யாபக சச்சிதானந்த மயமாந் தன்னேரில்லாத் தனிநிலை யடைந்தனர்.

உடனே அன்பர்கள் கூறும் அரகர முழக்கமும் கோவிந்தநாம சங்கீர்த்தனமும் பசனைகளின் ஆரவாரமும் அண்டமுகட்டைப் பிளந்து சென்றன. விண்ணவர்கள் பஞ்சதருக்களின் மலர்களைப் பொழிந்து பணிந்தனர்.

இராமைய அடிகள் திருவருள் நிலைபெற்ற செய்தியை யுணர்ந்து அடிகளைச் சிவகங்கையிற் கொண்டு சென்று சமாதி செய்யவேண்டுமென அந்நகர் மகாராணியாகிய காத்தம நாச்சியார் அவர்கள் முயன்றனர். கடியர் பட்டியார் பேரணிப்பட்டியார் முதலியோர்கள் தங்கள் தங்கள் நகரங்களிற் கொண்டுபோய் அடக்கஞ்செய்ய வேண்டுமென்று வாதாடினர். கீழப்பூங்குடியார் அடிகள் இந்நகரில் அமர்ந்து அடங்கி

யருளியபடியால் இங்கு அடக்கஞ் செய்தலே முறையெனத் தடுக்க இதை யாமோதித்து அன்பர்கள் பலரும் அடிகளை இந்நகரிற் சமாதி வைப்பதே தகுதி. அடிகளின்றிருவுளமும் அங்ஙனமேயிருந்தபடியாற் றான் அநேகமுறை தம்மை ஊருணிக்கரை யிராமன் என்றும், இலுப் பைப்பழந் தின்னலாம் என்றும் திருவாய் மலர்ந்தருளி அவ்வாறே ஊருணித் தென்கரையில் இலுப்பை மாத்தடியில் அமர்ந்து விதேக முத்தியடைந்தனர் எனப் புகன்றனர்.

அச்சமயம் இப்பூமனகரம் மேலவளவாராகிய தீர்த்தப்ப செட்டி யார் அவர்கள் பரம்பரையிலுள்ள கண்ணப்பசெட்டியார் சிவராமன் செட்டியாராகிய இருவரும் எழுந்து இராம தீர்த்தமாகிய ஊருணியுளிறங்கி 'எங்களுக்குச் சொந்தமான இவ்வூருணியின் றென் கரை முழுவதையும் இராமைய அடிகட்குச் சொந்தமாகும்படி மனம் வாக்குக் காயம் ஆகிய திரிகரண சுத்தியுடன் நீர்வார்க்கின்றேம்' என மும்முறை கூறி மூன்றுதரம் இருகைகளினும் நிறையத் தீர்த்தத்தை யள்ளித் தாரைவார்த்துத் தத்தஞ் செய்தனர்.

இவ்வாறு தத்தஞ்செய்து இராமைய அடிகட்குச் சொந்தமான இவ்வூருணித் தென்கரையில் அடிகளைச் சமாதி செய்தற்குத் தடை யாதென்று மற்றொருவரும் மறுக்க முடியாத ஏதுவுடன் அவ்விருவருங் கூற யாவரும் அதற்கிணங்கினர்.

அதன் பின்னர் இராமைய அடிகட்கு அபிஷேகாதிக ளியற்றி யலங்கரித்து விமானத்தி லெழுந்தருளச் செய்து பசனைக் கோஷ்டி களுடனும் பல்லாயிரஞ் சனத்திரள்களுடனும் வானளாவி முழங்கும் பல வாத்தியங்களுடனும் அன்பர்கள் புரியும் ஆனந்தத் தாண்டவங் களுடனும் நகர்வலஞ் செய்வித்து இராமதீர்த்தத் தென்கரையிற் கொண்டுவந்து அடிகள் ஒரு வாரம்வரை வீற்றிருந்தருளிச் சித்தி பெற்ற இடத்திலேயே சமாதிவைத்து, சமாதியின் மேல் அடிகள் அடைந்த உயர்நிலைக் குறிகுறியாகச் சிவலிங்கப்பிரதிட்டை செய்து பூசித்து வருவாராயினர்.

அன்றுகூடிய கூட்டமே பெருஞ் சந்தையாகி அது முதல் பானு வாரந்தோறும் வாரத்திற் கொருமுறை இப்பூமனகரத்தில் சந்தை கூடுவதாயிற்று.

சாலிவாகன சகாப்தம் ௲௮௱௰௯-ம் வருடம் ஆகிய விஜய ஸ்ரீ சித்திரைமாதம் ௨௰௯-உ ஞாயிற்றுக்கிழமை கிருஷ்ணபக்ஷம் சஷ்டி திதி உத்திராட நக்ஷத்திரம் உதையாதி ௰௫ நாழிகையளவில் கடக லக்கினத்தில் தாமஸ வேளையில் குருகால ஹோரையில் இராமைய அடிகள் சித்தி பெற்றருளினர்.

திருச்சிற்றம்பலம்.

௨

# கும்பாபிஷேகப் படலம்.

இராமைய அடிகள் அடங்கியதிலிருந்து (௩௰) முப்பதுவருடம் வரையில் அடிகளின் சமாதியாலயஞ் சிறிது மண்டபமாகவே யிருந்து வந்தது. அதன் பின்னர் இப் பூமனகரத்திலுள்ள அன்பர்கள் அனைவரும் முயன்று ஆலயத்தை விண்ணளாவிய விமானம் மண்டபம் முதலிய திருப்பணிகளை யழகுற வியற்றி கணேசர், சுப்பிரமணியர், நந்தி முதலிய பரிவார மூர்த்திகளும், உத்ஸவங்கொண் டெழுந்தருளுதற்கு இராமானுசமூர்த்தியுந் தாபித்து,

சாலிவாகன சகாப்தம் ௲௮௱௪௰௯-ம் வருடமாகிய உருத்திரோற்காரி ஆண்டு ஆனித்திங்கள் பதினேழாம் நாள் ஞாயிற்றுக்கிழமை கிருஷ்ணபக்ஷம் திருதியைதிதி திருவோண நக்ஷத்திரம் உதையாதி (௰௪) பதினான்கு நாழிகை யளவில் தாமஸவேளையில் குருகால ஹோரையில் கும்பாபிஷேகத்தைச் சிறப்புறச் செய்துவைத்தனர்.

இராமைய அடிகளின் சமாதியாலயந் திருப்பணி நிறைவெய்திக் கும்பாபிஷேகமாகிய அந்நாண்முதல் இப் பூமனகரத்தில் வாழும் உயர்தனவணிக உத்தமரும், கற்றார்க்களிக்குங் கருணையாளரும்

ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் றிரு

எனவும்,

பயன்மரம் உள்ளூர் பழுத்தற்றாற் செல்வம்
நயனுடை யான்கட் படின்

எனவும்,

அருளிய நமது தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனா ரருட் பெரு வாக்கியங்கட் கிலக்கியுமா யமைந்த அறப்பெருஞ் செல்வரும் ஆகிய திருவாளர் கூ. கரு. நா. சித. சிதம்பரஞ் செட்டியார் அவர் களும், திருவாளர் கூ. அரு. க. வயி. வயிரவன் செட்டியாரவர்களும் இராமைய அடிகட்கு நித்திய நைமித்திகங்களும், உத்ஸவாதிகளும், வருடந்தோறும் குருபூசா மகோத்ஸவமும் முறைப்படி யியற்றிப் பரிபாலித்து வருகின்றனர்.

திருச்சிற்றம்பலம்.

வாழ்க ராமைய மாதவன் பொன்னடி
வாழ்க ராமைய மாதவன் றொண்டர்கள்
வாழ்க ராமைய மாதவன் றன்கதை
வாழ்க இக்கதை யோதுமெய் யன்பரே.

வாழ்க வையகம் மாமறை யாகமம்
வாழ்க வென்றுஞ் சிதம்பர வண்மையோன்
வாழ்க வென்றும் வைரவ வள்ளலும்
வாழ்க பூம னகரமும் வாழ்கவே.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ மிளகாய்ச்சுவாமிகள் என வழங்கும்
இராமானுச சுவாமிகள் சரித்திரம்
முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

கோவிலூர் ஆதீனம்
கோவிலூர்-630 307

உ

சிவகுருமயம்.

இராமைய அடிகள்பால் ஞானோபதேசம் பெற்ற

புத்தூர். சிவானந்த சுவாமிகள்

# அடிகள்மேற் பாடியருளிய பதிகம்.

## விநாயகர் வணக்கம்.

ஒருகொம்ப தாய்ச்சுழி மேலோங்கி ஞானே யுயிர்க்குயிராய்ச்
சிறுகொம்ப தாகி வெளியோ டுலவிடுஞ் சிற்சுகத்தைத்
தருகொம்ப தாகி யிரண்டற்ற அன்பர் தமைப்பிரியா
துறுகொம்ப னானை களிற்றினைப் போற்றி யுளஞ்செய்வனே.

## பன்னிரு சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

முத்திபெறு சுத்தசிவ சத்துவம தாகியது
மூலமுத லாகுமுணர்வாய்
முதிர்கதிரு தருகிரண துவிதமறு பதியதித
முதறிவ துருவாகிடும்
பத்திவள ரன்பர்களு முத்தமர் களும்முரிய
பணிசெய்துன் னடியைநாடிப்
பாடிக் குதித்தமுத வானந்த மாரிசொரி
பரவசமு மேலிடவுமே
சத்துவ முதிக்கவரு ளெழுகின்ற சொருபமே
தமியனேன் சடவாதனை
சங்கற்ப மெனுமளறில் மனமணி மறைந்துவினை
தழைவதை விவேகவாள்கொண்
டத்துவித வெட்டியுனை நத்திடு பதத்திலினி
யடிமைகொண் டெனையாளுவாய்
அடிநடுவு முடிவிலா திலகுபர வெளியிலொளி
யருளிராமையகுருவே. (க)

சந்ததமு நினையன்றி வேறொன்றை யுணர்கிலாச்
சாயுச்ய பதமதாகி
சங்கற்ப மறவொன்றை நாடியத் துவிதமாஞ்
சச்சிதா னந்தமாகித்
தொந்தமில வானசம் பந்தமறு தொந்தமாந்
துரியா வதீதநிறைவாய்த்
துள்ளாது துள்ளுமன மசைவதறு பேரின்ப
சுகவாரி தன்னின்மூழ்கி
சிந்தையது வாகாத சனனவுற வாகினேன்
றேவநின் மயஞ்செய்குவாய்
தெய்வமே திருவருளி னுருவான வுருவமே
சிற்சுகோ தயமோனமே
அந்தமே பரசுகா னந்தமே யிகபரமு
மரியவுற வானபொருளே
அடிநடுவு முடிவிலா திலகுபர வெளியினொளி
யருளிரா மையகுருவே. (௨)

கருவரையி லுருவாகி யுருவிலுறு பொருளாய
கலைவேதம் விளைபீடமாய்க்
காலொத்து மேலுற்ற நகரநடு வனலுமாங்
கதிர்மதிகள் பிரியுமிடமாஞ்
சிருவறையின் வளையமென ஹரியென்ற மகரமேற்
றிருவொடும் புரிமானுமாஞ்
செப்புமேன் முக்கோண வீடுகுடி சிகரமிடு
சிவமுதி ருருத்ராதியாய்
மருள்பெருகு மறுகோண புவியிலுறு வகரமு
மகேசனீஸ் வரியுமுறவாய்
மறைநந்தி கொலுவீதி வழிகண்டு மனமேரு
வட்டவீ டாகாயமாய்
அருமறைகள் தருமுதிரு கிரணவொளி யதனிலெனை
யடிமைகொண் டிடும்வடிவமே
அடிநடுவு முடிவிலா திலகுபர வெளியினொளி
யருளிரா மையகுருவே. (௩)

ஆக்கையே பொய்யென்ற வாக்கமே மேலிடவு
மறிவதறி யாமையின்றி
யங்கமது புளகிதம தாகியே நிலையான
வனுபூதி பெருவாழ்வதாய்ப்
போக்குவர வின்றியதில் நீக்கமற நிறைகின்ற
பூரணப் பொருளாகியே
பொல்லாத மாயையி னகன்றுநா னின்னருள்
பொருந்துநா ளெந்தநாளோ
வாக்குமன மணுகாத கோசரப் பொருளாகி
வாய்க்கும் படிக்கதான
வடிவமே வுயிரினுயிர் விளைவான சொருபமே
வஞ்சநெஞ் சர்க்கெட்டிடா
தாக்கமே வெனவன்பர் பாக்கிய மெனப்புகழு
மமுதமே யமுதரசமே
அடிநடுவு முடிவிலா திலகுபர வெளியினொளி
யருளிரா மையகுருவே. (௪)

தீராத சனனமாய்ப் போராடு மாயையைச்
சிக்கிட வசப்படுத்தித்
தெளியாத சிந்தையாய்ப் பந்தமே கதிதந்
திழுக்கின்ற கொடியமனதை
நீராள மாயனலின் மெழுகா யுளங்கனிய
நிர்க்குண மதற்குணவதாய்
நின்றநிலை யாயவங் காந்தமு னிரும்பாகு
நேர்மைபோற் றுரியபதியிற்
பேர்த சுகசமாம் நிருவிகற் பத்திலே
பேசாத வுறவாகியே
பின்னிடைய வுன்மை னன்னிலைய தாகியே
பேரின்ப நிறையவருள்வாய்
ஆராரு மறியாத வாதான மோனமே
அட்டசித் தாடுபொருளே
அடிநடுவு முடிவிலா திலகுபர வெளியினொளி
யருளிரா மையகுருவே. (௫)

ஒன்றுமறி யாதவெனை நன்றுபொரு ளீதென
வுணர்த்தியதை நம்பிவந்தும்
உண்மைதெரி யாதபடி நன்மையாய்த் தீமையா
யுறவாகி யுறுவதல்லால்
இன்றுவரை கொண்டநற் சாதனத் தொழிலா
லியற்றுகதி யேதுமிலையே
யென்செயலி னாலவ தேதொன்று மில்லையே
யென்செய்கு வேனையனே
என்றுமொழி யாச்சனன மரணசா கரமதி
லியங்குமது வேதொழிலதா
மிதுவென்ன வதிசயம தானபழ வினையிதோ
யெளியநா னுணரவெளிதோ
அன்றுவந் தாண்டபொரு ளீதென்று வெளியாகு
மமுதமே மதுரரசமே
அடிநடுவு முடிவிலா திலகுபர வெளியினொளி
யருளிரா மையகுருவே. (சு)

புண்ணோடு வாடுமிடை பொற்கலையி னுடையோடு
பொற்கும்ப முலையைநாடிப்
பொட்டோடு மதிமுகப் பொலிவோடு சவ்வாது
புனுகோடு பூசநாறும்
பெண்ணோடு கூடவதி பேராசை மூடவப்
பேதையர்கள் பின்னோடியே
பேசுமுறை நாடியவர் பேணுமுற வாடலே
பேறென்று மதிமயங்கிப்
பண்ணோ டுனைத்தினம் பாடிநற் பத்தியாற்
பலகலைகள் தன்னைநாடிப்
பற்றிலா ரோடுகூடி யவரவர்க் குரியநற்
பணிபுரிந் துய்யவறியேன்
அண்ணோடு பெருகுமா னந்தசா கரமதனி
லடியனே னென்றுபடிவேன்
அடிநடுவு முடிவிலா திலகுபர வெளியினொளி
யருளிரா மையகுருவே. (எ)

பட்டுண்டு பணியுண்டு பவுசுண்டு தவிசுண்டு
பதிவிரதை மனைவியுண்டு
பாலுண்டு பாக்யமேன் மேலுண்டு சற்குணப்
பாலர்பதி னறுமுண்டு
செட்டுண்டு கனகமணி மாடிமேல் வீடுண்டு
திரிகரண சுத்தியுடனே
சிவனடிக் கன்புபூண் டடியரைப் பொருளெனச்
சென்றணைந் துபசரித்து
இட்டுண் டிருக்கிலங் கேதுகுறை தீவினையு
மில்லவே யில்லையில்லை
யென்னமுன் றிருவருள் புரிந்துமுப தேசித்த
வெந்தையே பந்தவினையால்
அட்டுண் டுறங்கியல மருவதல் லாமலோ
ரனுபூதி நிலையறிகிலேன்
அடிநடுவு முடிவிலா திலகுபர வெளியிலொளி
யருளிரா மையகுருவே. (அ)

ஞாலமதி லேயறிஞர் யோகமத னேகமதை
நாடியறி யாதகத்தில்
நான்முகனு மோதவரி தானபிர ணவமதனை
நாட்டியொளிர் குண்டலிதனை
மேலெழ வெழுப்பியிரு வளியையு மடைத்துமேல்
வீட்டின்வழி யைத்திறந்து
வீடுகுடி யேறியதி லாறுமமு துண்டுபவ
வினைகள்பொடி கண்டுநாளும்
ஓலிடு சிலம்புமுதல் வீணைதம் பூருபல
வொலியோடு தனைமறந்து
வுடலநெக் குருகமன துலையின்மெழு காகவே
வுள்ளொளிக் குள்ளமர்ந்தார்
ஆலடியின் மோனகுரு வானபொருள் நீயென
வடைந்தவடி யேனையாள்வாய்
அடிநடுவு முடிவிலா திலகுபர வெளியிலொளி
யருளிரா மையகுருவே. (கூ)

வழிகண் டலர்ந்தநறு மலர்கொண் டிடாதுமன
மலர்கொண்டு தூவிநிதமும்
மதியுண்ட தன்றியுன தருள்கொண் டுறைந்துநின்
மயமாகி னார்களடியார்
களிகொண்டு ஞானியையொர் கண்கொண் டுறாதுளக்
கண்கொண்டு நாடியுனையே
கண்டுகைக் கொண்டுமலர் கொண்டணிந் தாகிலும்
கைகுவிக் காதபாவி
வெளிகண்டு கொண்டாதி வழிகண்டு கொண்டுவிண்
மேல்கொளக் கால்நிறுத்தி
மின்னுகுண் டலியங்கி யாற்பொழியு மமுதுண்டு
மேவும் படிக்கருளுவாய்
அளிகொண்டி வடியனுக் கன்றுவந் தாட்கொண்
டரும்பொரு ளுணர்த்துமாசே
அடிநடுவு முடிவிலா திலகுபர வெளியினொளி
யருளிரா மையகுருவே. (ம)

இராமைய அடிகள் பதிகம்

முற்றியது.

திருச்சிற்றம்பலம்.

மீனலோசனி
பிரஸ்,
மதுரை.

கோவிலூர் ஆதீனம்
1118
Q1:332ம
கோவிலூர்-630 307